ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2088/50 - 2018 සැප්තැම්බර් මස 12 වැනි බදාදා - 2018.09.12
*2088/50 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபை மத்திய மாகாண மக்கள் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபைக்கு தயாரிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட நியதிச் சட்டத்தின் வரைவு

மத்திய மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்து சேவையானது, மாகாணம் மற்றும் தொடர்புபடும் மாகாணங்களுக்கிடையிலான மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அச் செயற்பாடுகளுடன் ஒன்றிணைந்த ஏனைய செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ள 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் நியதிச் சட்ட விதிமுறைகளுக்கேற்ப அதிகார சபையின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் நடைமுறையில் ஏற்படும் தேவைகள் போல காலத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட வேண்டிய வேறுபாடுகளினையும் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட நியதிச் சட்டத்தின் வரைவு தொடர்பான மக்களின் கருத்துக்களை விசாரிப்பதற்காக சமர்ப்பிக்கின்றேன்.

இவ் அறிவித்தல் வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்டு 10 நாட்கள் தாமதிக்கப்பட்டதன் பின்னர் அனுமதிக்காக மத்திய மாகாண சபைக்கு சமர்ப்பிப்பதுடன் அது தொடர்பாக ஏதேனும் கருத்தினை வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றீர்கள் எனில் அதற்கு முன்னர் எழுத்து மூலமாக கீழ்க் குறிப்பிடப்படும் முகவரியில் எனக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

**எதிரிவீர வீரவர்தன,**
மத்திய மாகாண மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, போக்குவரத்து,
மின்சக்தி மற்றும் எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண அமைச்சர்.

த.பெ. 104,
இல. 109,
யட்டிநுவர வீதி,
கண்டி.

1A - PG 4224 — 17 (2018/09)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## மத்திய மாகாணப் பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை உத்தேச நியதிச்சட்ட வரைபு

மத்திய மாகாணத்தின் மோட்டார் வண்டிகளில் பாதைகளில் பயணிகளை கொண்டு செல்லும் சேவைகள் மற்றும் பொருட்களை கொண்டு செல்வதை முறையானதாக்கவும் பாதைகள் போக்குவரத்து சேவைகள் மற்றும் மத்திய மாகாணத்திற்குரியதான அளவிற்கு மத்திய மாகாணத்தோடு சம்பந்தப்படும் மாகாண போக்குவரத்து சேவைகளையும் முறையானதாக்கவும் அந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் மத்திய மாகாணத்திற்கான போக்குவரத்து சேவைகள் அதிகார சபையொன்றை அமைப்பதற்கும் அது சம்பந்தமாக அல்லது அதனோடு தொடர்புடைய விடயங்களுக்காகவும் நடவடிக்கைகளை திட்டமிடுவதற்காக மற்றும் 1992 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கத்தைக் கொணட மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை நியதிச்சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்தைக் கொண்ட மத்திய மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபை நியதிச்சட்டமும் அதனோடு தொடர்புடைய திருத்தங்களை மேற்கொள்வதற்கான நியதிச்சட்டமுமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண சபையினால் இவ்வாறு விதந்துரைக் கப்படுகிறது.

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

1. இந்நியதிச் சட்டம் மத்திய மாகாணத்தின் 2018 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க போக்குவரத்து சேவைகள் அதிகார சபை நியதிச் சட்டம் எனும் பெயரில் அழைக்கப்படுவதுடன் மத்திய மாகாண ஆளுநர் அவர்களால் உறுதிப்படுத்தப்படும் (இதில் இதன் பின் குறிப்பிட்ட திகதி என குறிப்பிடப்படும்) தினத்திலிருந்து இந்நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

### I வது பகுதி

### மத்திய மாகாண போக்குவரத்து சேவை அதிகாரசபை

2. 1992 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மத்திய மாகாண பாதைகள் பயணிகள் போக்குவரத்து சேவை நியதிச் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கம் கொண்ட மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை நியதிச் சட்டம் இதில் குறித்துரைக்கப்படுகிறது.

*போக்குவரத்து சேவை அதிகார சபை.*

3. (1) இதில் இதன் பின் அதிகார சபை என அழைக்கப்படும் மத்திய மாகாண போக்குவரத்து சேவை அதிகார சபை அமைக்கப்படுகிறது.

(2) மேலே 3 (1) உப விதியின் மூலம் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள பெயரில் அதை ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டுமென்பதுடன் அதற்கு மேலதிக நிலைப்பாடும் பொது இலச்சினை ஒன்றும் இருக்க வேண்டுமென்பதுடன் அதிகார சபையின் பெயரிலேயே அதனாலேயே அதற்கு எதிராக வழக்குத் தொடர முடியும்.

*அதிகார சபையின் அங்கத்தவர்கள்.*

4. (1) அதிகார சபையின் பணிப்பாளர் சபை பதினொரு பேர்களைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்பதுடன் அதில் ஐந்து பேர் பதவி வழி அதிகாரமுடைய அங்கத்தவர்களும் ஆறு பேர் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் களாகவும் இருக்க வேண்டும்.

அதிகார சபையின் சகல அங்கத்தவர்களும் அமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் வழங்கப்படும் கடிதத்தின் மூலம் முறையாக நியமிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட சகல நியமனங்களும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

(2) (I) பதவி அதிகாரத்தில் "நியமிக்கப்படும் அங்கத்தவர்கள்" கீழே உள்ளவாறாக இருக்க வேண்டும்:-

(அ) மத்திய மாகாண போக்குவரத்து விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் நிறைவேற்று மட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்.

(ஆ) மத்திய மாகாண பிரதான செயலாளரால் பெயரிடப்படும் மாகாண திறைசேரியின் நிறைவேற்று மட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்.

(இ) மத்திய மாகாண பொறுப்பு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அல்லது அவரால் பெயரிடப்படும் உதவிப் பொலிஸ் அதிகார பதவிக்கு குறையாத உத்தியோகத்தர் ஒருவர்.

(ஈ) மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஒருவர்.

(உ) மத்திய மாகாண போக்குவரத்து ஆணையாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் உதவி ஆணையாளர் ஒருவர்.

(II) "நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்" கீழே உள்ளவறாகும்.

(அ) போக்குவரத்து சட்ட முகாமைத்துவம் வணிகம், நிர்வாகம் அல்லது சிவில் பொறியியல் துறை எனும் துறைகளில் ஒன்றில் அதிகளவு தகுதி பெற்றும் அவ்விடயங்கள் பற்றி தெளிவான அனுபவமும் திறமையும் காட்டியுள்ளதாக விடயப் பொறுப்பு அமைச்சர் திருப்திப்படக்கூடியவர்கள் நால்வர்.

(ஆ) பொருட்களையும் பயணிகளையும் போக்குவரத்திலீடுபடுத்துபவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக அமைச்சர் அவர்களின் விருப்பத்தின் பேரில் தெரிவு செய்யப்படும் இருவர்.

5. (1) அமைச்சர் அவர்களால் மேலே நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கிடையில் அங்கத்தவர் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட வேண்டும். அதிகார சபையின் தலைவர்.

(2) தலைவர் அவர்களின் பதவிக்காலம் அவர் அதிகார சபையில் அங்கத்துவம் வகிக்கும் கால எல்லை மற்றும் அமைச்சர் அவர்களின் விருப்பம் இருக்கும் வரையானதாகும்.

(3) நோய்வாய்ப்படுதல் இலங்கையிலிருந்து வெளியே இருத்தல் அல்லது வேறு இயலாமை காரணமாக தலைவர் அவர்களுக்கு தமது பதவிப் பொறுப்புகளை நிறைவேற்ற தற்காலிகமாக இயலாமல் போகும் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களால் தலைவராக பதில் கடமை புரிவதற்காக இருக்கும் அங்கத்தவர்களுக்கிடையில் ஒருவரை நியமித்துக்கொள்ள முடியும்.

6. இந்நியதிச்சட்டத்தில் போக்குவரத்து சேவைகள் அதிகார சபைக்கு வழங்கப்படும் அதிகாரங்களை செயல்படுத்தும் அதிகாரம் தலைவருக்குரியதாகும். தலைவர் அவர்களின் பொறுப்புகள்.

7. (1) தலைவர் அவர்களின் பதவி கீழே காட்டப்படும் காரணங்களில் ஒன்று அல்லது பலவற்றால் முடிவடைய வேண்டும். தலைவர் அவர்களின் பதவி ஒழிதல்.

(I) 13 ஆவது சரத்தின் படி அதிகார சபையின் அங்கத்துவத்திற்கு தகுதியின்மை

(II) தமது கையொப்பத்தின் கீழ் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்படும் கடித மூலம் இராஜினாமா செய்தல்

(III) அமைச்சர் அவர்களால் காரணங் காட்டப்பட்டு விலக்குதல்

(IV) இறத்தல்

(2) மேலேயுள்ள விதத்தில் வெற்றிடமாகும் தலைவர் பதவிக்காக விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் நிரந்தரமான தலைவர் ஒருவர் நியமிக்கப்படும் வரை போக்குவரத்து விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளர் அதிகார சபையின் தலைவராக பதில் கடமை புரிவதற்கு அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட வேண்டும்.

8. (1) அமைச்சர் அவர்களால் அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களாக யாராவது ஒருவரை நியமிக்கும் முன் அந்த நபரால் அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக தமது பொறுப்புகளை நிறைவேற்றும்போது வெறுக்கத்தக்க தலையீடுகளை ஏற்படுத்தும் அதிகார சபையின் நடவடிக்கைகளுக்குரிய நிதி அல்லது வேறு தொடர்புகள் அந்த நபருக்கு இல்லை என்பது பற்றி அமைச்சர் அவர்கள் திருப்தி அடைய வேண்டும். அங்கத்தவர்களின் நிதித் தொடர்புகள்.

(2) அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர் ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின் அவ்வாறான ஏதாவது தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவில்லை என அமைச்சர் அவர்கள் காலத்திற்கு காலம் திருப்திப்பட வேண்டும்.

(3) அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக நியமிப்பதற்கு அமைச்சர் அவர்களால் தீர்மானிக்கப்படும் யாராவது ஒருவர் அமைச்சர் அவர்களால் குறிப்பிட்ட விடயத்திற்காக விண்ணப்பிக்கும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இந்நியதிச் சட்டத்திற்குரிய விடயங்களுக்கு தேவை என அமைச்சர் அவர்கள் கருதும் ஏதாவது தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும்.

(4) அதிகார சபையினால் ஏற்படுத்திக்கொள்ளும் அல்லது ஏற்படுத்திக்கொள்ள உத்தேசிக்கும் ஏதாவதொரு ஒப்பந்தம் பற்றி ஏதாவது ஒரு வகையில் நேரடியாக அல்லது வேறு விதத்தில் முயற்சி எடுக்கும் அதிகார சபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவரால் தமது தொடர்புகளின் தன்மை பற்றி அதிகார சபைக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டவைஅதிகார சபைக் கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டுமென்பதுடன் அந்த ஒப்பந்தம் சம்பந்தமாக அதிகார சபையினால் நடத்தப்படும் ஏதாவதொரு கலந்துரையாடலுக்கு அல்லது அதிகார சபையால் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அந்த பணிப்பாளர் சபையில் அங்கத்தவர் பங்குபற்றக் கூடாது.

*அதிகார சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டம்.*

9. (1) அதிகார சபையின் சகல பணிப்பாளர் சபை கூட்டத்திலும் தலைவர் தலைமை தாங்க வேண்டும். தலைவர் அவர்கள் ஏதாவதொரு கூட்டத்திற்கு சமுகமளிக்காத சந்தர்ப்பத்தில் சமுகமளித்திருக்கும் அங்கத்தவர்களால் அவர்களுக்கிடையில் ஒருவரை அக்கூட்டத்திற்கான தலைவராக தெரிவு செய்துகொள்ள வேண்டும்.

(2) அதிகார சபையின் ஏதாவதொரு பணிப்பாளர் சபை கூட்டத்தின் நடப்பெண்ணாக ஆறுபேர் இருக்க வேண்டும்.

(3) அதிகார சபையால் கருதப்படுவதற்காக முன் வைக்கப்படும் சகல விடயங்களும் அதிகார சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு வந்துள்ள பணிப்பாளர் சபையின் பெரும்பான்மை அங்கத்தவர்களால் அனுமதிக்கப்பட வேண்டும்.

(4) ஏதாவதொரு பணிப்பாளர் சபையில் கவனத்திற்கெடுக்கப்படும் ஏதாவதொரு விடயத்திற்கேற்ப வழங்கப்படும் வாக்குகள் சமமானதென்றாலும் தலைவர் அவர்களுக்கு தமது ஆரம்ப வாக்குக்கு மேலதிகமாக தீர்மானிக்கும் வாக்கு ஒன்று இருக்க வேண்டும்.

(5) ஏதாவதொரு பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பணிப்பாளர் சபையின் யாராவது ஒரு அங்கத்தவர் தெரிவு செய்து கொள்ளப்படும்போது அல்லது நியமிக்கப்பட்டபோது ஏதாவதொரு குறை இருந்ததாக அல்லது அப்படிப்பட்ட அங்கத்தவர் பொருத்தமற்றவர் என பின்பு தெரிந்துகொள்ள வந்தால் அந்த நபருக்கு தகுதியிருந்ததாகக் கருதி அக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சகல விடயங்களும் ஏற்புடையதாக வேண்டும்.

(6) அதிகார சபையின் பணிப்பாளர் சபையில் அங்கத்தவர்களின் ஏதாவது ஒரு வெற்றிடம் காரணமாக மட்டும் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் எந்தவொரு செயல்பாடும் நடவடிக்கையும் அதிகாரமற்றதாக இருக்கக்கூடாது.

*பதவி அதிகாரத்தில் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்.*

10. அதிகார சபைக்கு பதவி அதிகாரத்தினால் நியமிக்கப்படும் சகல பணிப்பாளர் சபை அங்கத்தவர்களும் தாம் அதிகார சபைக்கு தெரிவு செய்யப்பட்டமை ஏதாவது பதவியின்படி அப்பதவி வகிக்கும் வரை பதவி அதிகாரத்தில் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை அங்கத்தவராக பதவி வகிக்க வேண்டும். பணிப்பாளர் சபையின் பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்பு மீண்டும் நியமிக்கப்பட முடியும்.

*அங்கத்தவருக்குரிய விதி முறைகள்.*

11. (1) இறத்தல், இராஜினாமா செய்தல் அல்லது பதவியிலிருந்து விலக்கப்படுதல் போன்ற காரணங்களின் பேரில் யாராவது ஒரு பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஏற்கனவே விலகிக் கொண்டால் ஒழிய அதிகார சபையின் சகல நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களும் அங்கத்தவர்களும் மூன்று வருடங்களுக்காக பதவி வகிக்க வேண்டுமென்பதுடன் ஏதாவது ஒரு காரணத்திற்காக விலக்கப்பட்டால் அன்றி மீண்டும் நியமிக்கப்படுவதற்கு அவர் தகுதி பெற்றவர் ஆவார்.

(2) அமைச்சர் அவர்களால் காரணம் காட்டப்பட்டு யாராவது ஒரு பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவரை விலக்க முடியும்.

(3) யாராவது ஒரு பணிப்பாளர் சபை அங்கத்தவரால் அமைச்சருக்கு அனுப்பும் கடிதமொன்றின் மூலம் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் பதவியிலிருந்து விலக முடியுமென்பதுடன் அந்த இராஜினாமா அமைச்சரால் பெற்றுக்கொள்ளப்பட்ட பின் செயல்படுத்த வேண்டும்.

(4) பணிப்பாளர் சபையின் அங்கத்துவ பதவியொன்று வெற்றிடமாகும்போது அந்த பணிப்பாளர் சபை அங்கத்தவரை நியமிக்க இந்த நியதிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அமைச்சரால் கவனத்திற்கெடுக்கப்பட்டு அவருக்குப் பதிலாக யாராவது ஒருவரை நியமிக்க முடியுமென்பதுடன் அந்த பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் தமது பதிவாளரான அங்கத்தவரின் மிகுதி பதவிக்காலத்திற்காக மட்டும் பதவி வகிக்க முடியும்

12. யாராவது ஒருவர் - அங்கத்தவராகுவதற்கான தகுதிகள்.

(1) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஏதாவது மாகாண சபையின் உறுப்பினர் ஒருவர் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றின் உறுப்பினராயின்,

(2) இலங்கைப் பிரசையாக இல்லாவிட்டால்,

(3) ஏற்றுக்கொள்ளப்பட்ட வைத்திய சபையொன்றினால் சித்த சுவாதீனமற்றவர் என தீர்மானிக்கப்பட்டிருந்தால் அல்லது முழுமையாக செயலிழந்தமைக்குட்பட்டிருந்தால்,

(4) இலங்கையில் அல்லது வேறொரு நாடொன்றில் வலுவிலிருக்கும் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்துள்ளவராக அறிவிக்கப்பட்ட அந்த குற்றவாளித் தன்மையிலிருந்து விடுதலை செய்யப்படாத ஒருவராயின்,

(5) இலங்கையில் அல்லது வேறு ஒரு நாட்டின் நீதிமன்றத்தினால் குற்றவியல் தண்டனைக்குட் படுத்தப்பட்டிருப்பின் அல்லது அவ்வாறான தண்டனையை அனுபவித்துக் கொண்டிருப்பவராயின்,

(6) இலஞ்ச ஊழல் சம்பந்தமான குற்றத்திற்கு உட்பட்டிருப்பவர் அல்லது குற்றவாளியாயின் அப்படிப்பட்டவர் அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக தொடர்ந்து செயல்பட தகுதியற்றவராக வேண்டும்.

13. (1) நிதி விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களிடம்டகேட்டு பொறுப்பு அமைச்சர் அவர்களால் தீர்மானிக்கப் படும் பணிக்கொடை மட்டும் அதிகார சபையின் கூட்டங்களில் சமுகமளிப்பதற்காக அதிகார சபை அங்கத்தவர் களுக்கு செலுத்தப்படும். அதிகார சபை கூட்டங்களுக்கு வருகை தருவதற்கான பணிக்கொடை.

(2) மாதத்திற்கு ஒருமுறை அதிகார சபையின் தேவைக்கேற்ப பணிப்பாளர் சபை கூட வேண்டுமென்பதுடன் தவணை தேவையேற்படின் விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கோ அல்லது விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு விசேட பணிப்பாளர் சபைக் கூட்டத்தை அழைக்க முடியும். பணிப்பாளர் சபை கூட்டத் தவணை.

14. (1) அதிகார சபையின் இலச்சினை அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக இருக்க வேண்டும். இலச்சினை.

(2) அதிகார சபையின் இலச்சினை.

(அ) அதிகார சபையின் இலச்சினை தலைவரின் பொறுப்பில் இருக்க வேண்டும்:-

(ஆ) தாம் சமுகந் தந்துள்ளமை பற்றிய உறுதிப்பத்திரத்தில் அல்லது பட்டியலுக்கு கையொப்பமிடும் அதிகார சபையின் அங்கத்தவர்கள் இருவர் முன்னிலையில் அன்றி எந்தவொரு உறுதிப் பத்திரத்திற்கும் பட்டியலுக்கும் இலச்சினையை பொறிக்கக் கூடாது.

## II வது பகுதி

### அதிகார சபைக்குரிய அதிகாரங்களும் பொறுப்புகளும்

15. அதிகார சபைக்குரிய அதிகாரங்களும் பொறுப்புகளும் கீழே காட்டப்பட்டுள்ளவாராக இருக்க வேண்டும். அதிகாரங்களும் பொறுப்புகளும்.

பயணிகள் பொருட்கள் போக்குவரத்து சேவைகள் சம்பந்தமான அதிகாரம்.

(1) (i) மாகாணத்திற்குள் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றுவது, முறைப்படுத்துவது மற்றும் பொருட்களை போக்குவரத்திலீடுபடுத்துவதை ஒழுங்குபடுத்துவதற்காக அதிகார படிவமொன்றை விநியோகித்தல், புதுப்பித்தல், திருத்துதல், இரத்து செய்தல், காலத்தை நீடித்தல், உரிமை வழங்குதல்.

பயணிகள் பொருட்கள் போக்குவரத்து சேவைக்கான வாகனங்களின் தரம்.

(ii) மாகாணத்திற்குள் பயணிகள் அல்லது பொருட்களை போக்குவரத்திலீடுபடுத்த அனுமதி பெற்றவரொருவரால் பயணிகள் போக்குவரத்து சேவையில் அல்லது பொருள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் மோட்டார் வாகன பயன்படுத்தும் அனுமதிப்பத்திரம் பெற்றவரால் பயன்படுத்தப்படும். தரத்தன்மையுடையதானதும் பொருத்தமானதானதும் பற்றி வேறு சட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்படாத பயணிகள் போக்குவரத்திற்கும் பொருள் போக்குவரத்திற்கும் அத்தியாவசியமாகும் தரத்தைப் பற்றி அமைச்சர் அவர்களுக்கு பரிந்துரைத்தல்.

தகவல்களை வழங்குதல்.

(iii) இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஏதாவது நோக்கத்திற்காக தேவைப்படும் தகவல்களும் அறிக்கைகளும் அதிகார சபைக்கு வழங்குமாறு இந்நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது எழுத்து மூல சட்டத்தின் கீழ் அல்லது பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டுள்ள வேறு எழுத்து மூல சட்டத்தின் கீழ் அல்லது பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டுள்ள ஒருவருக்கு அல்லது பொருட்கள் போக்குவரத்து சேவைகள் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள ஒருவருக்கு நிச்சயிக்கப்படுதல்,

பாடசாலை மாணவர்களை போக்குவரத்தில் ஈடுபடுத்துதல்.

(iv) மாகாணத்திற்குள் கட்டணமொன்று, பிரதிபலன் அல்லது பரிசுகளுக்காக பாடசாலை, பல்கலைக் கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய வேறு நிறுவனங்களின் மாணவர்களை போக்குவரத்திலீடுபடுத்துவதற்கான அதிகாரப் பத்திரங்களை விநியோகித்தலும் அனுசரணை கட்டணங்களின் பேரில் போக்குவரத்து சேவைகளை வழங்கலும் நிபந்தனைகளை விதித்தலும்.

காரியாலய ஊழியர்களையும் கைத்தொழிற்சாலை ஊழியர்களையும் போக்குவரத்திலீடு படுத்துதல்.

(v) மாகாணத்திற்குள் கட்டணம், பிரதிபலன், அல்லது பரிசுகளுக்காக பஸ் வண்டிகளில் அல்லது வேன்களில் மேற்கொள்ளப்படும் காரியால ஊழியர்களையும் கைத்தொழிற்சாலை ஊழியர்களையும் போக்குவரத்திலீடுபடுத்தும் சேவைகளை முறையாக செய்தல். குறிப்பிட்ட சேவைகளை நடத்துவதற்காக அனுமதிப்பத்திரம் விநியோகித்தலும் நிபந்தனைகளை விதித்தலும்.

முச்சக்கர வண்டிகள் வாடகை வண்டிகளில் பயணிகளை போக்குவரத்து செய்தல்.

(vi) மாகாணத்திற்குள் கட்டணங்கள் அறவிட்டு அல்லது கட்டணங்கள் அறவிடப்படாது பிரதிபலன் கருதி முச்சக்கர வண்டிகளிலும் வாடகை வண்டிகளிலும் மேற்கொள்ளப்படும் பொருட்களும் பயணிகளை போக்குவரத்திலீடுபடுத்தும் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக குறிப்பிட்ட பயணிகள் போக்குவரத்து சேவைகளை நடத்துவதற்கான அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தலும் நிபந்தனைகளை விதித்தலும்.

மாகாணத்திற்குள் போக்குவரத்து சேவை.

(vii) (அ) அதிகார சபையினால் விநியோகிக்கப்படும் பயணிகள் பொருட்கள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் இன்றியும் வேறு மாகாணத்திலிருந்து மத்திய மாகாணத்திற்குள் வந்து மத்திய மாகாணத்திற்குள் அல்லது மத்திய மாகாணத்திற் கூடாக கட்டணம், பரிசுகள், பிரதிபலன் அல்லது தனித்தனி கட்டணங்களின் பேரில் பயணிகள் அல்லது பொருட்கள் போக்குவரத்திலீடுபடுத்தப்படும் வாகனங்களிடமிருந்து சேவைக் கட்டணம் அறவிடுதல்.

(ஆ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அல்லது வேறு நிறுவனங்களால் அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல் சம்பந்தமாக சிபாரிசுகளைக் கேட்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான விதத்தில் சிபாரிசு செய்தல் மற்றும் இந்த அதிகார சபையின் சிபாரிசு இன்றி விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் கீழ் ஓடும் பஸ் வண்டிக்காக உள்வரும் அனுமதியை வழங்காமலும் அதனோடு தொடர்புடைய சட்ட நடவடிக்கைகளை எடுத்தலும்.

புதிய வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

(viii) மத்திய மாகாணத்திற்குள் பயணிகள் போக்குவரத்து சேவையை மேம்படுத்துதல் தரத்தினை அதிகரித்தலுக்காக பயணிகளினதும் முதலீட்டாளர்களினதும் அபிவிருத்திகாக புதிய வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல், செயல்படுதுதல், விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களினதும் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரினதும் இணக்கப்பாட்டுடனும் பணிப்பாளர் சபையின் அனுமதியுடனும் இதற்கான இணை குழுக்களை நியமித்தல், வேலைத்திட்டங்களையும் ஒழுங்குகளையும் மேற்கொள்ளும் அதிகாரம் அதிகார சபைக்கு உண்டு.

(ix) மாகாணத்திற்குள் சகல பொதி பயணிகள் போக்குவரத்து தேவைகளை நிறைவேற்றுவதற்காக பஸ் வண்டிகளின் பயணத்திற்கான பொது ஒன்றிணைந்த அல்லது அதிகார சபையினால் பொருத்தமானது என தீர்மானிக்கப்படும் முறையான நேர சூசியை நிர்ணயித்தல், அந்த நேர சூசியின்படி பயண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென சகல ஓட்டுனர்களுக்கும் நிர்ணயம் செய்தலும் அதை மீறுபவர்கள் சம்பந்தமாக நிலையத்திலேயே சேவைக்கட்டணத்தை நிர்ணயித்தலும் சட்ட நடவடிக்கை எடுத்தலும். நேர சூசிகளை நிர்ணயித்தல்.

(x) அனுமதிப் பத்திரமும் வேறு அதிகாரம் வழங்கல், புதுப்பித்தல், திருத்துதல், உரிமை வழங்குதல். அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.

(xi) அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளவர் பஸ் வண்டிக்குள்ளேயும் வெளியேயும் காட்சிப்படுத்தப்பட வேண்டிய பயண ஆரம்பம், முடிவுக் குறிகளையும் சின்னங்களையும் தற்போதுள்ள அரச தரங்களின் கொள்கைகளின் படி நிர்ணயித்தல். பஸ்வண்டிகளில் பயண முடிவு பெயர்ப்பலகைப் பற்றியது.

(xii) அதிகார சசைபயினால் விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரம் அல்லது வேறு அதிகார பத்திரத்தின் கீழ் பயணிகள் போக்குவரத்து அல்லது பொருட்கள் போக்குவரத்து வாகனங்களின் சாரதிகளையும் நடத்துனர்களையும் வண்டி உதவியாளர்களையும் பதிவு செய்தல், அனுமதிப் பத்திரம் வழங்குதல் மற்றும் பதிவு செய்யப்பட்ட சாரதிகள், நடத்துனர்கள், வாகன உதவியாளர்களின் பதிவினை இரத்துச் செய்தல் புதுப்பித்தல், இடை நிறுத்துதல். சாரதிகளையும் நடத்துனர்களையும் பதிவு செய்தல்.

(xiii) மாகாணத்திற்குள் பயணிகளையும் பொருட்களையும் போக்குவரத்து சம்பந்தமாக இந்நியதிச்சட்டத்தின் கீழ் பிழைகள் நடக்கும் செயல்களை தேடுதல், தடுத்தல், மற்றும் அவற்றிற்கு எதிராக செயல்படுவதை நோக்காகக் கொண்டு திடீர் சோதனை குழுக்களை நியமித்தலும் நியமனப்படுத்துதலும் அல்லது குறிப்பிட்ட குழுக்களின் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் தீர்மானித்தல். திடீர் சோதனைக் குழுவும் பொருள் போக்குவரத்தும்.

(xiv) வாடகை மோட்டார் வண்டிகளும் பொருட்களை போக்குவரத்து செய்யும் வாகனத் தரிப்பிடங்களை அமைத்தல், பராமரித்தல், முகாமைத்துவம், அபிவிருத்தி செய்தல், மாற்றுதல், மூடிவிடல் அல்லது சட்டப்படி கையகப்படுத்திக்கொள்ளல். நிறுத்துமிடக் காணியின் எல்லைகளுக்குள் உள்ள வெற்றிடங்களையும் கட்டடங்களையும் பயன்படுத்துதல். வாடகை மோட்டார் வண்டிகளும் பொருள் போக்கு வரத்து செய்யும் வண்டிகளின் தரிப்பிடம்.

(xv) மாகாணத்திற்குள் தனி கட்டணத்தின் பேரில் பயணிகள் போக்குவரத்து சேவையை நடத்தக்கூடிய பாதைகளை இணங்கானல், வகைப்படுத்துதல், மற்றும் அக்குறிப்பிட்ட ஒவ்வொரு பாதைகளில் பயணிகள் போக்குவரத்து சேவைகளுக்காக பயன்படுத்தக்கூடிய பஸ் வண்டிகளையும் வேறு மோட்டார் வண்டிகளையும் தரத்தினையும் தீர்மானித்தல். பயணிகள் போக்கு வரத்து சேவை பாதைகளை இனங்காணலும் அவற்றின் பயணி கள் வேண்டிய மோட்டார் வண்டி களை தீர்மானித் தல்.

(xvi) அதிகார சபையின் நோக்கங்கள், இலக்குகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இலங்கை அரசியல் சாசனத்தின் விதிகளுக்கும் வேறு ஏதாவது சட்ட விதிகளுக்கும் உட்பட்டு இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே யாராவது ஒருவர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கைக்கு வருதல் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக வேறு நிறுவனங்களுடன் தொடர்புபடல். ஒப்பந்தமும் உடன் படிக்கையும்.

(xvii) சாரதிகளையும் நடத்துனர்களையும் வாகன உதவியாளர்களையும் பயற்றுவிப்பதற்காக சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளை ஆரம்பித்தலும் பயிற்சித் திட்டங்களை நடத்துதலும். சாரதிகளையும் நடத்துனர்களையும் வாகன உதவி யாளர்களையும் பயிற்றுவித்தல்.

(xviii) பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து சேவைக்காக பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களின் தரங்களைப் பரீட்சிக்கும் இடங்களை நடத்தல். வாகனங்களின் தரங்களைப் பரீட்சித்தல்.

மாகாணத்தில் பஸ் நிறுத்துமிட நிர்வாகம்

(2) அதிகார சபைக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ள உப பட்டியலில் இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பஸ் வண்டி நிறுத்துமிடங்களும் பாதைகள் பயணிகள் தரிப்பிடங்கள் சம்பந்தமாக கீழே குறிப்பிடப்படும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தப்பட முடியும்.

(i) பஸ் நிறுத்துமிடங்களையும் பயணிகள் தரிப்பிடங்களை அமைத்தல், பராமரித்தல், மூடிவிடல், பராமரித்தல் அபிவிருத்தி செய்தல் மாற்றுதல், சட்ட ரீதியாக கையகப்படுத்துதல் நிறுத்துமிடக் காணிக்குள்ள வெற்றிடங்களையும் கட்டடங்களையும் பயன்படுத்துதல்.

(ii) பஸ் நிறுத்துமிடங்களில் பஸ் வண்டி போக்குவரத்து முகாமைத்துவ நடவடிக்கைகள், நேர சூசியை நிர்ணயித்தல், நடைமுறைப்படுத்துதல் பயணத் தவணைகள் ஆரம்பிக்கப்படும் இடங்களை நிச்சயித்தலைப் போன்று அதன் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்குத் தேவையான அதிகார சபை ஆளணியினர்களை ஈடுபடுத்துதலும் அவர்களின் அதிகாரத்தையும் பொறுப்புகளையும் கடமைகளையும் நிச்சயித்தல் சம்பந்தமான பணிப்புரைகளை விநியோகித்தல் பஸ் நிறுத்துமிடங்களில் அதிகார சபையின் ஆளணியினர்களால் பேணப்பட வேண்டிய அறிக்கைகளிலும் ஆவணங்களிலும் குறிப்பிட வேண்டிய தகவல்களை தீர்மானித்தல்.

(iii) அதிகார சபையினால் நிர்வகிக்கப்படும் முகாமைத்துவம் செய்யப்படும் பஸ் நிறுத்துமிடங்களின் நிர்வாகம், போக்குவரத்து சேவை நடவடிக்கைகளுக்கு வெளியார்களை சம்பந்தப்படுத்திக் கொள்வது சம்பந்தமாக தீர்மானிப்பது மற்றும் பிரமாணங்களை தீர்மானிக்கும் அதிகாரம் அதிகார சபைக்குரியதாகும்.

சொத்துக்களை கையகப்படுத்திக் கொள்ளல் விடுவித்தல்.

(3) விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியின் கீழ் அதிகார சபையின் தேவைக்காக ஏதாவதொரு அசையும் அல்லது அசையா சொத்துக்களை கையகப்படுத்துவது, விடுவிப்பது, குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுவது/எடுப்பது.

(4) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அதிகார சபையின் அதிகாரங்களையும், செயல்களையும் நோக்கங்களையும் முறையாக நிறைவேற்றுதல், நிறைவேற்றுவித்தலுக்குத் தேவையானதென அதிகார சபைக்கு ஏற்படும் வேறு அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல்.

## III ஆவது பகுதி

### அதிகார சபையின் ஆளணியினர்

ஆளணியினர்.

16. அதிகார சபையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஆளணியினரைத் தீர்மானிப்பது மற்றும் அதிகார சபைக்குரியதான வகையில் வேறு ஸ்தாபனக் கோவைகள் மற்றும் நிதி நிபந்தனைகளை அனுமதித்துக் கொள்ளும் வரை, அதிகார சபையின் சகல நிறுவன, நிதி நிர்வாக நடவடிக்கைகளுக்காக அரச சேவைக்கும் பொதுவாக உரித்தான ஸ்தாபனக் கோவை, மத்திய மாகாண நிதிச் சட்டக் கோவைக்கு ஏற்பவும், தற்போது அதிகாரத்திலிருக்கும் சட்ட திட்டங்களும் நிபந்தனைகளும் சுற்று நிருபங்களுக்கேற்பவும் இதன் பின் காட்டப்படும் செயல்களை நிறைவேற்றுவதற்கும் அதிகார சபைக்கு அதிகாரமுண்டு.

1. மத்திய மாகாண அமைச்சுக் குழுவின் அனுமதியின் பேரில் சகல நியமனங்கள், பதவி உயர்வு வழங்கல், ஆளணியினர்க்குரிய கல்வி, தொழில் மற்றும் ஏனைய தகுதிகளும் வேதனங்களும் சம்பள அளவுத் திட்டங்களும் உட்பட நியமனம் செய்யும் விதிமுறைகளைத் தயாரித்தலும் அனுமதிக்காக சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அனுப்புதலும்.

2. ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் தண்டனைகளை நிச்சயித்தலும் சேவையை முடித்தலும் இரத்துச் செய்தலும் போன்ற ஒழுக்கக் கட்டுப்பாடு, பொதுவான நடத்தை, விடுமுறை போன்ற ஆளணிக்குரிய நிபந்தனைகளை விதித்தல்.

3. ஆளணியினரின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு தேவையான ஆளணி அபிவிருத்தி முறைகளை ஏற்பாடு செய்தலும் அதற்காக ஒத்துழைத்தலும்.

4. அதிகார சபையின் ஆளணியினர்க்கான ஊழியர் சேமலாப நிதி முறையினை நடைமுறைப்படுத்துதல், பணிக்கொடை வழங்குததல் மற்றும் அதிகார சபையின் தீர்மானங்களின் படி விசேட கொடுப்பனவு முறைகளை நடைமுறைப்படுத்துதல்.

(5) அதிகார சபையின் ஆளணியினர்களுக்காக நலன்புரி செயல் முறைகளை நடைமுறைப்படுத்துதல்.

17. 1. அதிகார சபையினால் விதிக்கப்படும் ஒழுக்காற்று கட்டளைகளுக்கு எதிராக யாராவது ஒரு ஊழியர் 14 நாட்களுக்கு மேன் முறையீடு செய்ய முடியும். செயலாளரால் அதற்காக ஒரு குழுவை நியமித்து தீர்மானமொன்றை வழங்க முடியுமென்பதுடன் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும். ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக மேன் முறையீடு செய்தல்.

18. (1) மேலே 17 ஆம் பந்தியின் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதி முறைகளுக்கேற்ப ஊழியர்களை நியமித்துக் கொள்வதற்கு அதிகார சபைக்கு அதிகாரமுண்டு. ஊழியர்களை நியமித்துக் கொள்ளலும் உள்வாங்கலும்.

(2) அரச சேவையிலோ மாகாண அரச சேவையிலோ சேவை புரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரமுடையவர்களின் அனுமதியுடன் நிரந்தர அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு நியமித்துக்கொள்ள அதிகார சபைக்கு அதிகாரமுண்டு.

(3) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள யாராவது ஒரு உத்தியோகத்தரோ ஊழியரோ அதிகாரசபையின் ஆளணியில் நிரந்தர அடிப்படையில் நியமித்துக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அப்போதுள்ள அதிகாரத்திலிருக்கும் அரச முகாமைத்துவ சட்டத்திற்கும் நிபந்தனைகளுக்கும் மேற்பட்டு செயல்பட வேண்டும்.

19. அதிகார சபையின் சகல அங்கத்தவர்களும் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் தண்டனைச் சட்ட விதிக்கோவைக்கேற்பவும் அதன் செயல்களுக்கேற்பவும் அரச ஊழியர்களாக கருதப்பட வேண்டும். அதிகார சபை சேவையில் உள்ளவர்களை அரச ஊழியர்களாக கருதுதல்.

20. அதிகார சபை இலஞ்ச ஊழல் சட்டத்தின் பொருள் விளக்கத்திற்கேற்ப உப பட்டியல்படுத்தப்பட்ட நிறுவனமாக கருதப்பட வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அதன்படியே அர்த்தமுள்ளதாக்கப்பட வேண்டும். இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் வரும் நிறுவனமாகும்.

21. பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் விடயப்பொறுப்பு அமைச்சர் அவர்களின் விருப்பத்தின் பேரில் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப தகுதிகளை பெற்றுள்ள ஒருவர் முறைப்படி முகாமையாளரால் நியமிக்கப்படல் வேண்டும். முகாமையாளர்.

22. (1) அதிகார சபையின் பொதுக்கொள்கை விதிக்கேற்ப அதிகார சபையின் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் அதிகார சபையில் சேவையிலீடுபட்டுள்ளவர்கள் பற்றி பொதுவான ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் உட்பட்ட நிர்வாக ரீதியிலான செயல்களும் அதிகார சபையின் நிதி நிர்வாகம் பற்றிய பொதுவான மேற்பார்வையும் பற்றிய பொறுப்புகள் பொது முகாமையாளர் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

(2) தலைவர் அவர்களினால் அதிகார சபை மேம்பாட்டிற்காக காலத்திற்குக் காலம் தேவைப்படுவதாக கருதப்படும் வேறு அதிகாரங்களும் பொறுப்புகளும் முகாமையாளருக்கு வழங்க முடியும்.

23. (1) அதிகார சபையின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் பெற்றுக்கொள்ள உத்தியோகத்தர் களை ஈடுபடுத்துதல் வழிகாட்டல், மதிப்பீடு செய்தல், நிர்வகித்தல் ஒழுக்காற்று நடத்தைகளைப் பேணுதல். முகாமையாளரின் அதிகாரங்களும் பொறுப்புகளும்.

(2) எதிர்கால போக்குவரத்து தேவைகளை இனங்கண்டு போக்குவரத்துத் துறையின் அபிவிருத்திக்காக புதிய பிரமாணங்களை இனங்கண்டு கொள்ளலும் தேசியக் கொள்கைகளுக்கு உரிய பிரேரணைகளை முன் வைத்தலும் அதற்குரிய சட்ட முறைகளை தயாரித்தலும் நடைமுறைப்படுத்துதலும்.

(3) அதிகார சபையின் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் சம்பந்தப்பட்டவர்களோடு ஒப்பந்தங் களுக்கு வரலும், அதிகாரசபையோடு தொடர்புடைய ஒப்பந்த நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்துதலும் நிர்வகித்தலும் உட்பட சொத்துக்களை பாதுகாப்புடன் பயன்படுத்துதல்.

*முகாமையாளரால் அதிகாரமளித்தல்.*

*24.* முகாமையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கிடையிலும் பொறுப்புக்களுக்கிடையிலும் அவர் தேவை என கருதும் விதத்தில் ஏதாவது ஒன்றை வேறொரு பொருத்தமான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு எழுத்து மூலம் கொடுக்க முடியும்.

## IV ஆவது பகுதி

### பயணிகள் போக்குவரத்தும் பொருள் போக்குவரத்தும் சேவை அனுமதிப்பத்திரம்

*நிரந்தர சேவை மற்றும் விசேட சேவைகளுக்காக பயணிகள் போக்கு வரத்து சேவை அதிகாரப் பத்திரம்.*

*25.* (1) யாராவது ஒருவரால் குறிப்பிட்ட தினத்தில் அல்லது அதற்கு பிறகு மத்திய மாகாணத்திற்குள் அதிகார சபையினால் விநியோகிக்கப்படும் சமகாலத்தில் அதிகாரத்திலிருக்கும் செல்லுபடியான நிரந்தர பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தில் அல்லது அதோடு சமமான வேறு அதிகார பத்திரத்தின் கீழ் அன்றி ஏதாவது கட்டணம் அல்லது பரிசு அல்லது தனித்தனியாக கட்டணத்தை அறவிட்டு பயணிகளை போக்குவரத்திலீடுபடுத்துவதற்காக எவர் ஒருவராலும் மோட்டார் வாகனமொன்றைப் பயன்படுத்தக் கூடாது.

(2) மேலே (1) ஆவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடுகளை மீறி மாகாணத்திற்குள் பயணிகளை போக்குவரத்திலீடுபடுத்துவது இந்த நியதிச் சட்டத்தின் படி குற்றமாகும்.

(3) எவர் ஒருவரும் அல்லது நிறுவனமொன்றினால் இந்த நியதிச்சட்டம் அமுலுக்கும் வரும் தினத்தில் அல்லது அதன் பின்பு தனித்தனி கட்டணத்தின் பேரில் பாதைகளில் பயணிகள் போக்குவரத்து நாளாந்த சேவைக்காக பஸ் வண்டி ஒன்றோ அல்லது மாகாண அதிகார சபையால் பயணிகள் போக்குவரத்திற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள வாகனங்களைத் தவிர வேறு மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்தக் கூடாது.

*பொருள் போக்கு வரத்துச் சேவைக் காக நாளாந்த அனுமதிப் பத்திரம்.*

*26.* இந்நியதிச் சட்டம் அமுலுக்கு வரும் திகதி அல்லது அதற்குப்பிறது அதிகார சபையினால் விநியோகிக்கப் படும் அல்லது சம காலத்தில் அதிகாரத்திலுள்ள செல்லுபடியாகும் பொருள் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் அல்லது வேறு அதிகார அனுமதிப்பத்திரத்தின் கீழ் அன்றி கட்டணமோ பரிசுக்காகவோ, மத்திய மாகாணத்திற்குள் பொருள் போக்குவரத்துக்காக மோட்டார் வாகனமொன்றைப் பயன்படுத்தக் கூடாது.

*விசேட அனுமதிப் பத்திரம்.*

*27.* குறிப்பிட்ட திகதிக்கும் அதற்குப் பிறகும் அதற்காக அதிகார சபையினால் பெறப்பட்ட சமகாலத்தில் அதிகாரத்திலிருக்கும் விசேட அனுமதிப்பத்திரம் அல்லது அவ்வாறான அதிகாரத்தின் பேரில் அன்றி தனித்தனியான கட்டணத்தின் பேரில் நிரந்தர பயணிகள் போக்குவரத்து சேவைக்காக பயன்படுத்திக் கொண்டிருக்கும் ஏதாவது ஒரு பஸ் வண்டியை அதன் நிரந்தர சேவையை விடுத்து வேறு பயணிகள் போக்குவரத்து சேவைக்காக மாகாணத்திற்குள் அல்லது மாகாணங்களுக்கிடையில் பயன்படுத்தப்படக் கூடாது.

*பயணிகளை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்காக நிரந்தர சேவை அனுமதிப் பத்திரம்.*

*28.* (1) நிரந்தர பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரத்தின் மூலம் அதில் உள்ளடங்கியுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப அந்த அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையில் அல்லது பாதைகளில் பயணிகள் போக்குவரத்திற்காக இணங்கிய சேவையை மேற்கொள்வதற்காக மோட்டார் வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்கு அந்த அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ளவருக்கு உரிமை கிடைக்கின்றது.

(2) ஏதாவது ஒரு பஸ் வண்டிக்காக அதில் பதிவு செய்யப்பட்டுள்ள உரிமையாளர் இல்லாத ஒருவருக்கு நிரந்தர பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படக் கூடாது.

(3) இந்நியதிச் சட்டத்தின் 24 (3) உப பிரிவின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட சட்ட ரீதியான பயணிகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் பெற்றுள்ள பஸ் வண்டி இல்லாத வேறு மோட்டார் வண்டிகளுக்கும் 28 ஆவது பிரிவில் மேலே உப பிரிவில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் ஒன்று சேர அதிகாரமுடையதாக இருக்கும்.

இந்த பிரிவில் ''மோட்டார் வண்டி'' என்பது போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனம் எனப் பொருள்படும்.

29. (1) சமகாலப் பொருட்கள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தின் மூலம் அதில் உள்ளடக்கப் பட்டுள்ள நிபந்தனைகளின்படி மாகாணத்திற்குள் பொருட்கள் போக்குவரத்திற்காக இணங் கப்பட்ட சேவையை நடத்துவதற்காக மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்த அந்த அனுமதிப் பத்திரத்தைக் கொண்டவர் உரிமையுடையவராவார். பொருள் போக்கு வரத்திற்காக சமகால சேவை அனுமதிப் பத்திரம்.

(2) சட்டத்தின்படி பொருட்களைப் போக்குவரத்திலீடுபடுத்தும் வாகனமொன்றிற்காக அதன் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் அல்லாத ஒருவருக்கு சட்டப்படி பொருட்கள் போக்குவரத்து சேவைகள் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படக் கூடாது.

இந்தப் பிரிவில் "மோட்டார் வாகனம்" என்பது பொருட்களை போக்குவரத்திலீடுபடுத்தும் லொறி, டிரேலர் போன்ற வாகனங்கள் எனப்படும்.

30. (1) அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கேற்ப மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின் கையொப்பத்துடன் கீழேயுள்ள விபரங்களுடன் அவரது விண்ணப்பப்படிவத்தை அதிகார சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். பயணிகள் அல்லது பொருட் கள் போக்குவரத்து சேவைக்காக விண்ணப்பித்தல்.

(அ) விண்ணப்பப்படிவம் சம்பந்தப்பட்ட பஸ் வண்டிக்காகவாயின்,

(i) அதன் பதிவு செய்யப்பட்ட இலக்கம், ஆசனங்களின் எண்ணிக்கை, உள்ளக உயரத்தின் அளவு,

(ii) வெவ்வேறு கட்டணங்களின் படி பயணிகள் போக்குவரத்துக்காக விண்ணப்பப் படிவத்திற்குரிய பஸ் வண்டியை பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்படும் பாதையின் ஆரம்ப இடம், இடையிலுள்ள முக்கிய நிறுத்துமிடங்கள் பயண முடிவு, பாதை இலக்கம், பாதையின் தூரம் (சராசரியாக) குறிப்பிட வேண்டும்.

(iii) இந்நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் அல்லது நிராகரித்தல் சம்பந்தமாக தமது விருப்பத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அதிகார சபை கேட்கும் விபரங்கள் விண்ணப்பதாரியால் வழங்கப்பட வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவம் பொருட்களை போக்குவரத்து செய்வதற்காக மோட்டார் வாகன மொன்றைப் பயன்படுத்திக் கொள்வதாயின்,

(i) அதன் பதிவிலக்கம், நிறை, ஏற்றக்கூடிய ஆகக்கூடிய நிறை

(ii) பொருட்களை போக்குவரத்திலீடுபடுத்தும் வாகனத்தின் மோட்டார் வாகனத்திற்கு ட்ரேலர் பொருத்தப்பட்டிருப்பின் அந்த ட்ரேலரின் பதிவு இலக்கம், நிறை ஏற்றக்கூடிய ஆகக்கூடிய நிறை

(iii) இந்நியதிச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி அனுமதிப்பத்திரம் விநியோகித்தல் அல்லது நிராகரித்தல் சம்பந்தமாக தமது விருப்பத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அதிகார சபை கேட்கும் விபரங்கள் விண்ணப்பதாரியால் வழங்கப்பட வேண்டும்.

31. அனுமதிப்பத்திரம் வழங்குவது அல்லது நிராகரிப்பது சம்பந்தமாகவும் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றைப் புதுப்பிப்பது, திருத்துவது, அதன் உரிமையை வழங்க அனுமதி வழங்குதல் அல்லது குறிப்பிட்ட செயல்பாடுகளை நிராகரிக்கும் அதிகாரம் அதிகார சபைக்குரியதாகும். அனுமதிப் பத்திரம் பற்றிய விருப்பம்.

32. தீர்மானிக்கப்படும் கட்டணம் அல்லது கட்டணம் செலுத்தப்படுமாயின் இந்நியதிச்சட்டத்தின்படி தீர்மானிக்கப்படும் அல்லது அமுலாக்கப்படும் நிபந்தனைகளும் தேவைகளும் நிறைவேற்றப்படவில்லை யெனில், அதிகார சபையினால் இந்நியதிச்சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் எவரொருவருக்கும் வழங்கப் படக்கூடாது. அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம்.

பயணிகள் போக்கு வரத்து அனுமதிப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய நிபந்தனைகள்.

*33.* இந்நியதிச் சட்டத்தின் விதிமுறைகளுக்கும், அதன் மூலம் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதாவது பணிப்புரைகளின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப இந்நியதிச் சட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் சகல பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரமும் பொது மக்களின் பாதுகாப்பு, நன்மை வசதிகளை வழங்குவதை உறுதிப்படுத்தும் விதத்தில் நிபந்தனை விதிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவை சந்தர்ப்பத்திற்கேற்ப திருத்தப்பட வேண்டும்.

பொருட்கள் போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய நிபந்தனைகள்.

*34.* இந்நியதிச் சட்டத்தின் விதிமுறைகளுக்கும், அதன் மூலம் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதாவது பணிப்புரைகளின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப இந்நியதிச் சட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் சகல பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரமும் பொது மக்களின் பாதுகாப்பு, நன்மை வசதிகளை வழங்குவதை உறுதிப் படுத்தும் விதத்தில் நிபந்தனை விதிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவை சந்தர்ப்பத்திற்கேற்ப திருத்தப்பட வேண்டும்.

அனுமதிப்பத்திரத்தை மாற்றுதல்.

*35.* இந்நியதிச் சட்டத்தின் கீழ் யாராவது ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள பயணிகள், பொருட்கள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை யாராவது ஒருவருக்கு மாற்றுவதற்கான அனுமதி அமைச்சர் அவர்களால் செய்யப்பட வேண்டும்.

அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தல்.

*36.* அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரால் அதைப் புதுப்பிப்பதற்காக அதிகார சபையிடம் விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்.

(i) இந்நியதிச்சட்டத்தின் விதிமுறைகள் அல்லது அதன் கீழ் விதிக்கப்பட்டுள்ள பணிப்புரைகளின் படி செயல்பட்டிருப்பதாகவும்.

(ii) இந்நியதிச்சட்டத்தின் விதிமுறைகளின் படி அல்லது அதன் கீழ் விதிக்கப்பட்டுள்ள பணிப்புரைகளுக்கேற்ப ஏதாவது தவறுக்கு குற்றவாளியாக்கப்படவில்லையென அதிகார சபை திருப்தியடையுமாயின், அவரால் அந்த அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் காலம் முடியும் தினத்திலிருந்து பிறகு ஒரு வருடத்திற்கோ அல்லது அதிகார சபையினால் தீர்மானிக்கப்படும் ஒரு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு அந்த அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்க முடியும்.

அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் அல்லது இடை நிறுத்துதல்.

*37.* அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர்:

*(1)* இந்நியதிச்சட்டத்தின் விதிமுறைகளுக்கு அல்லது அதன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு கட்டளையை மீறி உள்ள போது;

*(2)* அனுமதிப் பத்திரத்திற்காக அதிகார சபையிடம் விண்ணப்பிக்கும் விண்ணப்பப் படிவத்தில் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏதாவதொரு அறிக்கையில் அல்லது எழுத்து மூல தகவல்களில் அல்லது எழுத்து மூலம் விளக்கமளிக்கும் போது அவர் பொய்யான அல்லது, பிழையான தகவல்களை வழங்கியுள்ளதாக அதிகார சபைக்கு தெரியவரின் அதிகார சபையினால் அந்த அனுமதிப் பத்திரம் சம்பந்தமாக குறித்த அனுமதிப் பத்திரக் கட்டணத்தைப் போல் மூன்று மடங்குக்குக் குறையாத மேலதிகக் கட்டணத்தை அறவிடும் கட்டளையை அல்லது அனுமதிப் பத்திரத்தை மூன்று மாதத்திற்கு குறையாத காலத்திற்கு இடைநிறுத்த அல்லது அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்யும் கட்டளையைப் பிறப்பிக்க முடியும்.

*(3)* இந்த பிரிவின் கீழ் அதிகார சபையினால் அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்தம் அல்லது இரத்துச் செய்யவுடனேயே அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள போக்குவரத்து சேவையை மேற்கொள்வதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

அதிகார சபையின் தீர்மானத்திற்கான காரணத்தை அனுமதிப்பத்திர விண்ணப்பிப் பாளருக்கு அறிவிக்க வேண்டும். என்பது பற்றி.

*38.* அதிகார சபையினால்

*(1)* அனுமதிப்பத்திரத்தை வழங்குவதோ புதுப்பிப்பதோ மாற்றுவதோ நிராகரிக்கப்படுதலோ.

(2) அனுமதிப்பத்திரத்தை வழங்குவதை இடை நிறுத்துதல், திருத்துதல் அல்லது மேலதிக பணம் அறவிடல் அல்லது அது பற்றி தீர்மானம் அல்லது பணிப்புரை செய்யும் சந்தர்ப்பத்தில் அக்குறிப்பிட்ட தீர்மானத்திற்கு அல்லது பணிப்புரைக்கு சந்தர்ப்பத்திற்கேற்ப அனுமதிப் பத்திர விண்ணப்பதாரிக்கு அல்லது அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பவருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

(3) (1) உம் (2) உப பிரிவுகளில் உள்ளவற்றிற்காக கட்டளை அல்லது தீர்மானத்தை பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட தினம் குறிப்பிட்ட கட்டளை அல்லது தீர்மானமெடுக்கப்பட்ட தினமாக கருதப்பட வேண்டும். எனினும் இந்த தீர்மானம் நடைமுறைக்கு வரும் தினம் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட தினத்திலிருந்து மூன்று நாட்கள் சென்ற பின் வரும் திகதியாகக் கருதப்படும்.

(4) (1) உம் (2) உப பிரிவுகளில் குறிப்பிட்ட தீர்மானத்தில் அல்லது கட்டளையில் அதிருப்திக்குள்ளான விண்ணப்பதாரி அல்லது அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளவர் மேன்முறையீடு செய்தால் சந்தர்ப்பத்திற்கேற்ப அத்தீர்மானத்தை அல்லது கட்டளை தமக்குக் கிடைத்த தினத்திலிருந்து பதினாறு நாட்களுக்குள் அத்தீர்மானத்திற்கு அல்லது கட்டளைக்கு எதிராக எழுத்துமூல மேன்முறையீடொன்றை (மாகாண விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்ப வேண்டும். மேன்முறையீடு.

(5) மேலே 4 ஆவது பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடு கவனத்திற்கெடுத்த பிறகு செயலாளரால்:

(அ) மேன்முறையீட்டிற்கு இடமளித்து மேன்முறையீட்டிற்கேற்ப அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கோ புதுப்பிப்பதற்கோ அதிகார சபைக்கு பணிப்புரை வழங்கவோ அல்லது;

(ஆ) மேன்முறையீட்டை நிராகரிக்கவோ அல்லது;

(இ) அனுமதிப் பத்திரத்தை திருத்தவோ அல்லது தமது தீர்மானத்தை ஏற்ற வகையில் குறிப்பிட்ட அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு பணிப்புரை செய்ய முடியும்.

(6) செயலாளரின் அத்தீர்மானம் மேன்முறையீடு கிடைத்த பதினாறு நாட்களுக்குள் மேன் முறையீட்டாளருக்கும் அதிகார சபைக்கும் அறிவிக்க வேண்டும்.

(7) 4 ஆவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் அல்லது கட்டளையில் அதிருப்தியடைந்த அனுமதிப்பத்திர விண்ணப்பதாரி அல்லது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு (1) உம் (2) உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட தீர்மானத்தில் அல்லது கட்டளையில் அதிருப்திக்குள்ளான விண்ணப்பதாரி அல்லது அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளவர் சந்தர்ப்பத்திற்கேற்ப அத் தீர்மானத்தை அல்லது கட்டளை தமக்குக் கிடைத்த தினத்திலிருந்து பதினாறு நாட்களுக்குள் அத்தீர்மானத்திற்கு அல்லது கட்டளைக்கு எதிராக எழுத்து மூல மேன்முறையீடொன்றை (மாகாண விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு) அனுப்ப வேண்டும். அமைச்சர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

(8) தமக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டினை ஆராய்ந்து பார்த்து அமைச்சர் அவர்கள்,

(அ) மேன்முறையீட்டிற்கு இடமளித்து மேன்முறையீட்டிற்கேற்ப அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கோ புதுப்பிப்பதற்கோ அதிகார சபைக்கு பணிப்புரை வழங்கவோ அல்லது,

(ஆ) மேன்முறையீட்டை நிராகரிக்கவோ அல்லது,

(இ) அனுமதிப் பத்திரத்தை திருத்தவோ அல்லது தமது தீர்மானத்திற்கு ஏற்ற வகையில் குறிப்பிட்ட அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு பணிப்புரை செய்ய முடியும்.

(9) மேன்முறையிட்டின் பேரில் அமைச்சர் அவர்களால் எடுக்கப்படும் தீர்மானம் தாமதிமின்றி அதிகார சபைக்கும் மேன் முறையீட்டாளருக்கும் அறிவிக்கப்பட வேண்டும்.

39. குறிப்பட்ட திகதியில் அல்லது அதன்பின் அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட சமகாலத்தில் செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரம் அல்லது அதிகார சபை ஏற்றுக் கொள்ளும் வேறு அனுமதியின்றி எந்தவொரு மோட்டார் வாகனத்திற்கும் மாகாணத்திற்கும் அமைந்துள்ள பயணிகள் தங்குமிடங்களுக்கோ பஸ்தரிப்பிடங்களுக்கோ வரக்கூடாது.

## V ஆவது பகுதி

## *நிதி*

*அதிகார சபையின் கணக்கு*

40. (1) அதிகார சபைக்கு அதற்கே உரிய கணக்கொன்று அல்லது பல கணக்குகள் இருக்க வேண்டும்.

(2) கீழே காட்டப்படும் பணம் அதிகார சபையின் கணக்கில் வைப்பிலிடப்பட வேண்டும்.

(i) மாகாண சபையினாலோ மத்திய அரசினாலோ ஒதுக்கப்படும் எல்லாப்பணமும்.

(ii) நன்கொடை, உதவிக் கொடைகள் மற்றும் கடனாக அதிகார சபைக்கு கிடைக்கும் பணம்.

(iii) பல்வேறு வேலைத்திட்டங்களின் மூலம் கிடைக்கும் பணம்

(iv) மாகாண அதிகார சபையின் செயல்களை நடைமுறைப்படுத்தும் போது நிலையத்தின் சேவைக் கட்டணங்களாக அதிகார சபைக்கு கிடைக்கும் பணம் அல்லது கட்டணமாக அறிவிடப்படும் சகல பணமும்,

(v) அதிகார சபையினால் அதன் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் விடயங்களையும் நோக்கங் களையும் நிறைவேற்றுவதன் மூலம் கிடைக்கும் அல்லது அறிவிடப்படும் சகல பணமும்.

(3) கணக்கை பேணல் நடைமுறைப்படுத்துதல் இந்நியதிச்சட்டத்தின் விதிமுறைகளுக்கும் மாகாண நிதி சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் III வது அத்தியாயத்தின் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும்.

*கிடைப்பனவுகளும் கொடுப்பனவு களும் பற்றிய பொதுவான மேற்பார்வை.*

41. அதிகார சபையின் கணக்குகளுக்கு கிடைக்கும் பணமும் கொடுப்பனவு பற்றிய பணமும் பற்றிய பொதுவான மேற்பார்வை பற்றி பொறுப்புக் கூற வேண்டியது, முகாமையாளருக்கு வழங்கப்படுகிறது.

*அதிகார சபை யினால் நிதியத்தை பயன்படுத்திக் கொள்ளல்.*

42. அதிகார சபையின் கணக்குகள் கீழே காட்டப்படும் விதத்தில் பணம் செலவழிக்க முடியும்.

1. அதிகார சபையின் அங்கத்தவர்களின் கொடுப்பனவு.

இந்தியதிச் சட்டத்தின் கீழ் அதிகார சபைக்கு சொந்தமான சகல அதிகாரங்கள், பொறுப்புகள், செயல்களை நிறைவேற்றுவதற்கு போது செலவழிக்க வேண்டிய எல்லாப் பணமும்,

2. அதிகார சபையின் உத்தியோகத்தர்களின் சம்பளமும் பணிக்கொடையும் மற்றும் வேறு கொடுப்பனவுகளும்.

3. 15(vii) இன் படி விசேட வேலைத்திட்டங்களுக்காக நிதியை ஒதுக்குதல்

4. தொழில்வாண்மை மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான நிதியை ஒதுக்குதல்

5. அடிப்படை வசதி அபிவிருத்தி செய்தல்

6. அதிகார சபையின் நிதி நிலைமைக்கேற்ப மேற்கொள்ளப்படும் மனித வள அபிவிருத்தி நடவடிக்கைக்காக.

*அதிகார சபைனால் கடன் பெறல்.*

43. (1) அதிகார சபையின் நிலையான நோக்கத்திற்காக மாகாண அமைச்சுக் குழுவின் முழு இணக் கப்பாட்டுடன் கடன் பெறுவதற்கு அதிகார சபைக்கு அதிகாரம் இருப்பதுடன் கடன் தொகையை மீள செலுத்தும் கால எல்லை, கடன் கட்டுப்பாடு போன்ற நிபந்தனைகளும் கடன் பெற்றுக்கொள்ள எதிர்ப்பார்க்கும் நிறுவனங்கள் மாகாண அமைச்சுக்குழுவின் தீர்மானத்தின் படியானதாக இருக்க வேண்டும்.

(2) இந்த நியதிச்சட்டத்தின்படி அதிகார சபைக்கு அதன் பொறுப்புளை நிறைவேற்றுவதற்குத் தேவையான குறுகியகால பணத் தேவைகள் போக்குவரத்து அமைச்சர் அவர்களின் விருப்பத்துடன் அல்லது அவரால் வழங்கப்படும் பொது அனுமதிக்கும் தீர்மானத்திற்கும் ஏற்ப மேலதிகமாக அல்லது வேறு விதத்தில் அதிகார சபையினால் தற்காலிகமாக கடனுக்கு வாங்க முடியும்.

எனினும் அதிகார சபையினால் இச்சரத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட தற்காலிக கடன் தொகை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அமைச்சர் அவர்களால் நிச்சயிக்கப்படும் தொகைக்கு மேற்படக் கூடாது.

44. அதிகார சபையின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாக வேண்டும். நிதி ஆண்டு.

45. (1) அதிகார சபையின் வருமானம் செலவு, சொத்துக்கள் வைப்பீடுகள் போன்ற சகல நிதி தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக அரசக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் கணக்காய்வு செய்யப்படும். மத்திய மாகாண கணக்காய்வுப் பணிப்பாளருக்கும் தேவையான போது கணக்காய்வு செய்ய முடியும். அதிகார சபையின் கணக்காய்வு.

(2) ஒவ்வொரு நிதி ஆண்டிற்காக கணக்கின் சொத்துக்கள் அந்த நிதி ஆண்டு முடிந்து மூன்று மாதம் முடியும் முன்பு கணக்காய்விற்காக கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். கணக்காய்வின் போது. அவருக்கு உதவுவதற்காக தகுதி வாய்ந்த ஒரு கணக்காளரின் அல்லது கணக்காளர்களின் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன் அவர்கள் அவரின் ஆலோசனையின் பேரிலும் நிர்வாகத்தின் கீழும் செயல்பட வேண்டும்.

(3) கணக்காய்வு செய்யும் விடயத்திற்காக கணக்காளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகளை ஈடு செய்யும் பொருட்டு தலைவர்/முகாமையாளரினால் தீர்மானிக்கப்படும் அல்லது கணக்குப் பிரிவினால் கோரப்படும் ஏதாவது தொகையை கணக்காளருக்கு அதிகார சபையின் நிதியிலிருந்து கொடுக்க முடியும்.

(4) கணக்காளர் நாயகத்திற்கும் கணக்குகளை ஆய்வுக்குட்படுத்தும் போது அவருக்கு உதவும் யாராவது ஒருவருக்கு கணக்காளர் நாயகத்திற்கு கணக்காய்வுக்குத் தேவையென கருதப்படும். சகல புத்தகங்கள், உறுதிகள், ஒப்பந்தங்கள், வவுச்சர்களும் கணக்கேடுகள் தொடர்புடைய ஏனைய ஆவணங்களையும் பரீட்சிக்கும் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருக்க வேண்டுமென்பதுடன் அதற்குத் தேவையானதென தமது அறிவுக்கேற்ப வழங்கப்பட வேண்டிய தகவல்களை அதிகார சபையினால் அல்லது உத்தியோகத்தரால் அவருக்கு வழங்க வேண்டும்.

(5) இந்த சரத்திலுள்ள விடயங்களுக்காக தகுதிபெற்ற கணக்காய்வு என்பது.

(அ) இலங்கையில் அதிகாரம் பெற்ற கணக்காளர்களின் நிறுவனத்தில் அல்லது சட்டத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏதாவதொரு நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் கணக்காளர் நாயகமாக செயல்படுத்துவதற்காக விநியோகிக்கப்பட்டுள்ள சான்றிதழைப் பெற்றுள்ள ஒருவர்.

(ஆ) ஒவ்வொரு பங்குதாரருக்கும் கணக்காளர் நாயகமாக செயல்படுவதற்காக அந்த நிறுவனத்தின் கவுன்சிலின் மூலம் விநியோகிக்கப்பட்ட சான்றிதழுடன் இலங்கையின் அதிகாரம் பெற்ற கணக்காளர் நிறுவனத்தில் அல்லது சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட வேறு நிறுவன மொன்றின் அங்கத்துவத்தைக் கொண்ட பங்குதாரர்ளைக் கொண்ட கணக்காளர் கூட்டுத்தாபனம் என கருதப்படும்.

46. (1) கணக்காளர் நாயகம் அதிகார சபையின் கணக்குகளை பரிசீலித்து. கணக்காளர் நாயகத்தின் அறிக்கை.

(அ) அவருக்குத் தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தலும் கிடைத்தது அல்லது கிடைக்கவில்லை என குறிப்பிட்டு.

(ஆ) அதிகார சபையின் செயற்பாடுகள் உண்மையானதும் நியாயமானதும் என்று காட்டுவதற்காக முன் வைக்கப்பட்டுள்ள கணக்கறிக்கைகள் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதா என குறிப்பிட்டு.

(இ) அவரின் கருத்துப்படி மாகாண சபையினால் அதிகார சபையின் கணக்குகளும் நடவடிக்கைகளும் பற்றி ஏதாவது ஒரு விசாரணையை செய்வதற்காக அக்கறை காட்ட வேண்டும். என்று கருதும் கணக்குகளுக்குரிய ஏதாவது இருப்பின் அது பற்றி கவனமெடுத்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்க முடியும்.

(2) கணக்காளர் அந்த அறிக்கையை கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு அனுப்புவார்.

கணக்கு அறிக்கையும் அதிகார சபையின் வருடாந்த அறிக்கையையும் அமைச்சர் அவர் களுக்கு சமர்ப்பித்தல்.

47. ஒவ்வொரு வருடத்திலும் கணக்கின் சொத்துக்களும் வைப்புகளும், பற்றி கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளும் கணக்காளர் நாயகத்தின் அறிக்கையும் தமக்கு கிடைத்ததன் பின் தலைவர் அவர்களால் அந்த அறிக்கையையும் சொத்துக்களும் வைப்புகளும் பற்றி கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கையும் அதிகார சபையின் வருடாந்த செயல்பாடுகள் பற்றிய அறிக்கையுடன் போக்குவரத்து விடயப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர் அவர்களுக்கு ஒப்படைக்க வேண்டு மென்பதுடன் அவரால் அதன் பிரதிகளை சம்பந்தப்பட்ட கணக்குகளின் நிதி ஆண்டு முடிவடைந்து நான்கு மாதங்களுக்குள் மாகாண சபையில் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

## VI ஆவது பகுதி

## பொது விதிமுறைகள்

கட்டளை பிறப்பிக்க அமைச்சருக்குள்ள அதிகாரம்.

48. (1) அதிகார சபையினால் அதன் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக அமைச்சர் அவர்களால் அதிகார சபைக்கு காலத்திற்கு காலம் பொதுவானதும் விசேசமானதுமான விதிமுறைகளை வெளியிட முடியுமென்பதுடன் அதிகார சபை அக்கட்டளைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

(2) அதிகார சபையின் நடவடிக்கைகள் சம்பந்தமாக தம்மால் தீர்மானிக்கபடும் படிவமொன்றில் தமக்கு வழக்கப்பட்டுள்ள தவணை அறிக்கை கணக்குகளும் வேறு தகவல்களும் வழங்குமாறு அமைச்சர் அவர்களால் காலத்திற்குக் காலம் அதிகார சபைக்கு கட்டளை இட முடியுமென்பதுடன் அதிகார சபையினால் அந்த சகல கட்டளைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்.

வாகனத்திற்குள் பிரவேசித்தலும் பரிசோதித்தலும்.

49. அதிகார சபையினால் அதிகாரமளிமளிக்கப்பட்டுள்ள மற்றும் வேறு ஏதாவது அதிகாரத்தைக்கொண்ட ஒருவர் ஏதாவது ஒரு நேரத்தில் அல்லது இடத்தில் மத்திய மாகாணத்திற்குள் எந்தவொரு இடத்திலும்.

(1) பொருட்களை அல்லது பயணிகளை போக்குவரத்திலீடுபடுத்தும் ஏதாவதொரு வாகனம், அதற்கான அதிகாரம் இந்நியதிச் சட்டத்தில் அல்லது வேறு நிறுவனமொன்றில் இருந்து பெறப்பட்டுள்ளதா என்பது பற்றி அந்த அனுமதிப்பத்திரத்திற்குரிய நிபந்தனைகள் குறிப்பிட்ட வாகனத்தின் சாரதி நடாத்துனர், வண்டி உதவியாளர் அல்லது பொறுப்பிலிருக்கும் ஒருவர் பற்றி உள்ளதா என்பது நியதிச்சட்டத்தின் கட்டளைகளும் நிபந்தனைகளும் பின் பற்றி உள்ளது பற்றி அறிந்து கொள்வதற்காக வாகனத்திற்குள் உட்பிரவேசித்தல் வாகனத்தை சோதித்தல் என்பதை செய்ய முடியும்.

(2) (i) பயணிகள் அல்லது பொருட்கள் போக்குவரத்திற்காக சம்பந்தப்பட்ட வாகனத்திற்கு அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் அல்லது அவ்வாகனத்திற்காக வழங்கப்பட்டுள்ள வேறு ஏதாவது ஒரு கடிதம் என்பவற்றை முன்வைக்குமாறு அந்த வாகனத்தின் சாரதி, நடத்துனர் அல்லது வாகன உதவியாளருக்கோ பொறுப்பிலிருப்பவரிடம் கேட்க முடியும், இல்லையேல்.

(ii) அந்த அனுமதிப்பத்திரம் அல்லது வேறு கடிதங்களின் பிரதிகளை தமது பொறுப்பிற்கு எடுக்க முடியும் அவ்வாறு ஏதாவதொரு ஆவணத்தைப் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் அதற்காக ஒரு பற்றுச் சீட்டினை வழங்க முடியும்.

(3) மோட்டார் வண்டி போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள சாரதி அனுமதிப்பத்திரம் வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம், தேவையானது என கருதப்படும் வேறு ஆவணங்களை பரிசீலிக்க முடியும்.

50. (1) (அ) அதிகார சபையினால் இந்நியதிச்சட்டத்தின் கீழ் நல்ல எண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்ததாக கூறப்படும் ஏதாவது செயல் சம்பந்தமாக அதிகார சபைக்கு எதிராக அல்லது. வழக்குத் தொடருவதிலிருந்து பாதுகாப்பு.

(ஆ) அதிகார சபையின் யாராவது ஒரு அங்கத்தவர் அல்லது ஊழியரொருவரால் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அதிகார சபையின் ஆணைக்குப் புறம்பாக நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கூறப்படும் ஏதாவதொரு செயல் அல்லது செய்யாமல் விடப்பட்டமை சம்பந்தமாக அந்த உறுப்பினருக்கு, உத்தியோகத்தருக்கு, ஊழியருக்கு எதிராக எந்தவொரு சிவில் அல்லது குற்ற வழக்கொன்று தொடரக் கூடாது.

(2) அதிகார சபைக்கு எதிராக ஏதாவதொரு சிவில் அல்லது குற்ற வழக்கொன்றில் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் செலவு அதிகாரசபை நிதியில் இருந்து செலுத்தப்பட வேண்டும். அவ்வாறான சிவில் அல்லது குற்ற வழக்கொன்றில் அதிகார சபையினால் அறவிடப்படும் ஏதாவதொரு செலவு அலலது நட்டஈடு அதிகார சபையின் நிதியில் வைப்பிலிடப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட குற்றம் சம்பந்தமாக உத்தியோகத்தர் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பு கூற கடமைப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட அதிகார சபையின் நிதியிலிருந்து கொடுப்பனவு சம்பந்தமாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் பணிப்பாளர் சபைக்குரியதாகும்.

51. (1) அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் அல்லது இந்தியதிச்சட்டத்தின் கீழ் உள்ள அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் பயணிகள் அல்லது பொருட்கள் போக்குவரத்திலீடுபடும் மோட்டார் வண்டிக்கு ஏற்ப இந்த நியதிச்சட்டத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ள ஆணைகள் எதையும் மீறியிருக்கும் போது அந்த மீறல் நிலைய சேவைக்கட்டணம் கேட்கக் கூடியதாயின் குறிப்பிட்ட மீறல் பற்றிய பொறுப்பை தமது சுய விருப்பில் ஏற்றுக்கொண்ட யாராவது ஒருவரால் குறிப்பிட்ட மீறல் சம்பந்தமாக வழக்குத் தொடருவதற்குப் பதிலாக வழக்கிலுள்ள ஆகக் கூடிய சேவைக் கட்டணத்திற்குட்பட்டு சேவைக் கட்டணத்தை தீர்மானிக்க முடியும். அது பற்றி அதிகாரம் வழங்கப்பட்ட வேறொரு தகுதிபெற்ற உத்தியோகத்தர் பொறுத்தமான விதத்தில் பயணப் பாதை மற்றும் மோட்டார் வாகனத்தின் இலக்கத்துடன் அதிகார சபைக்கு அறிவிக்க வேண்டும். நிலைய சேவைக் கட்டணம்.

(2) அப்படிப்பட்ட நிலைய சேவை கட்டணமொன்றில் அதிகார சபைக்கு அல்லது அதிகார சபையின் உப காரியாலயத்திற்கு அதிகார சபையின் நிதியில் வைப்பிலிடுமாறு செலுத்தி, செலுத்தியமைக்கு சாட்சியாக குற்றம் கண்டுபிடிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு கிழமைக்குள் சம்பந்தப்பட்ட ரசீதினை அதிகார சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

52. உண்மையிலேயே பயணிகள் போக்குவரத்து சேவையின் மேம்பாட்டிற்காக பொருத்தமான சந்தர்ப்பத்தில் பொது அரச கொள்கைகளுக்கேற்ப பஸ் வண்டியை கொள்வனவு செய்வதற்காக வசதிகளையும் குத்தகை சலுகையினைப் பெற்றுக்கொடுப்பதற்காக அதிகார சபையினால் சிபாரிசு செய்ய முடியும். பஸ் வண்டியொன்றை கொள்வனவு செய்வதற்கான சிபாரிசு.

53. (1) அமைச்சர் அவர்களால் இந்நியதிச்சட்டத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் வலுவுடையதாக்குவதற்கும் கட்டளையிட முடியும். நியதிச்சட்டத்தின் கீழ் கட்டளை பிறப்பித்தல்.

(2) (1) வது உப பிரிவின் மூலம் வழங்கப்படும் அதிகாரங்களின் பொதுத் தன்மைக்கு அநீதி ஏற்படாத வாறு அமைச்சர் அவர்களால் கீழேயுள்ள சகல அல்லது ஒவ்வொரு விடயம் சம்பந்தமாக கட்டளை பிறப்பிக்க முடியும்.

(அ) இந்நியதிச் சட்டத்தில் கட்டளை பிறப்பிப்பதற்காக குறிப்பிட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட சகல விடயங்களும்.

(ஆ) அனுமதிப்பத்திரத்தையும் வேறு அதிகாரத்தையும் வழங்குதல், புதுப்பித்தல், திருத்துதல், உரிமைகளை மாற்றுதல் மற்றும் அது சம்பந்தமானபோது பின்பற்றப்பற்றப்பட வேண்டிய செயல் ஒழுங்குவிதிகளும் பயன்படுத்தப்பட வேண்டிய படிவமும் செலுத்த வேண்டிய கட்டணத்தை தீர்மானித்தலும்.

*(3) பாதைகளின் தரமும் பாவனைக்கேற்பவும் குறிப்பிட்ட பாதைகளின் கட்டணத்தின் பேரில் பயணிகள் போக்குவரத்தும் பொருட்கள் போக்குவரத்துக்காகவும் மோட்டார் வண்டிகளை நிர்ணயித்தலும் மோட்டார் வாகனங்களைப் பாவிப்பது சம்பந்தமாக பின்பற்ற வேண்டிய தன்மைகளையும் நிர்ணயித்தல்.*

*(4) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்படி பாவிக்கப்படுகின்ற வாகனமொன்றின் சாரதி, நடத்துனர், வண்டி உதவியாளர் அல்லது வாகனத்திற்கு பொறுப்பாக இருக்கும் ஒருவரால் கொண்டு செல்ல வேண்டிய பட்டியல்களும் அவற்றில் உள்ளடக்கப்பட வேண்டியதுமான விபரம்.*

*(5) நிரந்தரமான பயணிகள் போக்குவரத்து சேவைகள் அனுமதிப் பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் பயன்படுத்தப்படும் பஸ் வண்டிகளில் பயணத் தவணைகள் சம்பந்தமாக வைத்துக்கொள்ள வேண்டிய அறிக்கை.*

*(6) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் பயன்படுத்தப்படுகின்ற வண்டிகளைப் பாவிக்கும் யாராவது ஒருவரால் பின்பற்ற வேண்டிய அனுமதிக்கப்பட்டவை.*

*(7) நிரந்தரமான பயணிகள் பொருட்கள் போக்குவரத்து சேவைகள் அனுமதிப்பத்திரத்தைக் கொண்டவர்களால் அவை அனுமதிப்பத்திரத்தின் கீழ் பயன்படுத்தப்படும் பஸ் வண்டிகளின் சாரதிகள், நடத்துனர்கள் வண்டி உதவியாளர்களாக சேவையில் ஈடுபடுத்துபவர்கள் சம்பந்தமாக அவர்கள் சேவையை ஆரம்பிக்கும் மற்றும் முடிக்கும் நேரம் மற்றும் அவர்களால் எடுக்கப்படும் ஓய்வு நேரம் சம்பந்தமாக அந்த அனுமதிப்பத்திரத்தைக் கொண்டவர்களால் வைத்துக்கொள்ள வேண்டிய அறிக்கை.*

*(8) அவ்வாறு வைத்திருக்கும் அறிக்கைகளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளல், அதிகார சபையால் அதிகாரமளிக்கப்பட்டவரால் அவ்வறிக்கைகளை பரீட்சித்தலும் அவ்வாறு அனுமதிக்கப்பட்டவரிடம் கேட்கும் போது அவ்வறிக்கையை பரீட்சிப்பதற்காக முன் வைப்பதும்.*

*(9) அனுமதிப்பத்திரங்களின் அதிகாரத்தில் பயணிகள் போக்குவரத்தில் பொருள் போக்குவரத்தில் ஈடுபடும் சராதிகள், நடத்துனர்கள் வண்டி உதவியாளர்களை பதிவு செய்தல், அப்பதிவு செய்தலை, புதுப்பித்தல், இரத்து செய்தல் இடை நிறுத்துதல் சம்பந்தமாக செயல் ஒழுங்கு விதிமுறைகளைத் தயாரித்தல்.*

*(10) அனுமதிப்பத்திரங்களின் அதிகாரத்தின் கீழ் நிரந்தர பயணிகள் போக்குவரத்தி லீடுபடும் மோட்டர் வண்டிகளின் சாரதிகளாலும் நடத்துனர்களாலும் அணிந்து கொண்டிருக்க வேண்டிய சீருடை மற்றும் இலட்சினைகளை தீர்மானித்தல், அந்த வாகனங்களின் சாரதிகளும் நடத்துனர்களும் பயணிகள் போக்குவரத்திலீடுபடும் சந்தர்ப்பத்தில் அவர்களால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்க விதிகளை தீர்மானித்தல்.*

*(11) விசேசமாக பஸ் வண்டிகளின் போக்குவரத்தினை ஒன்றிணைக்கவும் நேரங்களை குறிப்பிடுதல் வசதிகளை முறையாகவும் நியாயமான முறையில் வழங்கவும் பஸ் வண்டி நிறுத்துமிடம், பஸ் தரிப்பிடங்கள் பாதைகளில் உள்ள நிறுத்துமிடங்களை முகாமைத்துவம் செய்தல் பற்றி.*

*(12) மாகாணத்திற்குள் பயணிகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரமொன்று அல்லது ஏதாவது அதிகார அனுமதிப்பத்திரத்தின் கீழ் ஓட்டிச் செல்லப்படும் பாடசாலை வேன் வண்டிகள், முச்சக்கர வண்டிகள், வாடகை வாகனங்களுக்காக வேறு சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படாத பயணிகள் போக்குவரத்து சேவைக்காக அறவிடப்படும் கட்டணங்களைத் தீர்மானித்தல், நிச்சயித்தலும் அவற்றைத் திருத்துதலும்.*

*(13) நிரந்தர பயணிகள், பொருட்கள் போக்குவரத்து சேவை மற்றும் வேறு பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரங்களின் அதிகாரத்தின் கீழ் ஈடுபடுத்தப்படும் சாரதிகளின், நடத்துனர்களின் ஆகக் கூடிய தகுதிகளை தீர்மானித்தலும் அவர்களின் உடல் உளத் தன்மைகளை காலத்துக்கு காலம் பரீட்சித்தலும்.*

*(14 ) உள்ளக மாகாண அனுமதிப்பத்திரத்தைக் கொண்டவர் மத்திய மாகாணத்திற்குள் பயணிகள் போக்குவரத்தின் போது பின்பற்றப்பட வேண்டிய நடைறைகளும் கட்டணம் அறிவிடப்படுதல் பற்றிய நிபந்தனைகளை விதித்தலும்.*

*(15) இதன் 1 ஆவது உப சரத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சகல கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டுமென்பதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட தினத்தில் அது நடைமுறைப் படுத்தப்படும்.*

*(16) இதன் (1) ஆவது உபசரத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சகல கட்டளைகளும் அவை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் அனுமதிக்காக மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட பின் அனுமதிக்கப்படாத ஏதாவது கட்டளை இருப்பின் அதன் கீழ் ஏற்கனவே செய்யப்பட்ட செயல்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு அனுமதிக்கப் பட்ட தினத்திலிருந்து அக்கட்டளை நடைமுறைப்படுத்தப்படுவதாக கருதப்படும்.*

*(17) ஏதாவது கட்டளை அவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டதாக கருதப்படும் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.*

## VII ஆவது பகுதி

### குற்றங்களும் தண்டனைகளும்

*54. (1)* (i) *பஸ் வண்டியில் அனுமதிச் சீட்டுடன் பயணிக்கும் ஒருவருக்கு இடையூரேற்படுத்தும் அல்லது அகௌரவப்படுத்தும் அல்லது ஏதோவொரு வகையில் அவலட்சனமான, முறைகேடான அல்லது, ஆவேசத்துடன் நடத்துதல், பயன்படுத்துதலை மேற்கொள்ளும் அப்பஸ் வண்டியின் சாரதி அல்லது நடத்துனர் எனும் ஒருவர்.* *குற்றம்.*

(ii) *பயணிகள் பயணிக்கும் பஸ் வண்டியில் உள்ளக ஒலி பெருக்கி இயந்திரம் அல்லது உபகரணங்களின் சத்தத்தின் அளவு அதிகார சபையினால் நிச்சயிக்கப்படும் சத்தத்தின் அளவுக்கு மேற்படும் சந்தர்ப்பத்தில் பஸ் வண்டியின் அனுமதிப் பத்திரத்தையும் வைத்திருக்கும் சாரதி அல்லது நடத்துனர்.*

(iii) *சாரதியாக, நடத்துனராக, உதவியாளராக முறையாக பதிவு செய்யப்படாத ஒருவர் அல்லது அவ்வாறு பதிவு செய்யப்படாத ஒருவர் அல்லது அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் அதிகார சபையினால் விநியோகிக்கப்படும் பயணிகள் போக்குவரத்தில் அல்லது பொருட்கள் போக்குவரத்தில் ஈடுபடும் ஒருவர்.*

(iv) *(அ) அதிகார சபையின் அனுமதியின் பேரில் அல்லது அதன் கீழ் விநியோகிக்கப்படும். ஏதாவது அனுமதிச் சீட்டினை முறைகேடாக பாவிக்கப்படும் அல்லது அதை வேறொருவருக்கு இடமளிக்கும் ஒருவர்;*

*(ஆ) அவ்வாறான ஏதாவது அனுமதிச் சீட்டினை முறைகேடாகப் பயன்படுத்தும் தன்மையை மாற்றம் இருக்கும் அல்லது அழிக்கும்;*

*(இ) அவ்வாறான ஏதாவது அனுமதிச் சீட்டினை அதிகார சபையின் அனுமதியின்றி, விற்கும், வழங்கும் பகிர்ந்தளிக்கும் அல்லது விற்பதற்காக கொடுக்கும்;*

*(ஈ) அனுமதியின்றி அப்படிப்பட்ட அனுமதிச் சீட்டினை அச்சிட்டுள்ளார் என கருதப்படும் அல்லது பாவிக்கும், ஏதாவது அனுமதிச் சீட்டினை பாவிக்கக்கூடிய வகையில் அச்சிடும்;*

*(உ) அதிகார சபையின் அனுமதியின் பேரில் அல்லது அதன் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் அனுமதிச் சீட்டினை வழங்காது போக்குவரத்திலீடுபடுத்தும் ஒருவர்;*

(v) அதிகார சபைக்கு சொந்தமான பஸ் நிறுத்துமிடமொன்றில் அமைந்துள்ள அல்லது வேறு இடத்தில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றில் அல்லது பயணிகள் பாதுகாப்பிடத்தில் அதிகார சபையின் அனுமதியின்றி விளம்பரங்களை ஒட்டுதல், அறிவித்தல்களை ஒட்டுதல், எழுத்துக்கள், பதங்கள், சொற்களை எழுதுதல் அல்லது படங்கள், புகைப்படங்கள், அல்லது வேறு குறியீடுகளை வரைதல் மூலம் அறிவித்தல்களைக் காட்சிப்படுத்துதல் எனும் எந்த விதத்திலேனும் வேண்டுமென்றே அசுத்தப்படுத்தும் ஒருவர் ;

இந்தியதிச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாக்கப்படுவதுடன் நீதவான் நீதி மன்றில் தொடுக்கப்பட்ட வழக்கொன்றில் மஜிஸ்ரேட் ஒருவரால் குற்றவாளியாக்கப்பட்டால் ஆயிரம் ரூபாவிற்கு குறையாக தண்டத்திற்கோ அல்லது மூன்று மாதத்திற்கு மேற்படாத காலத்திற்காக இரெண்டு முறையில் ஒரு விதத்திற்கு சிறைப்படுத்தவோ அல்லது தண்டத்திற்கும் சிறைப்படுத்தப்படலுக்குமான இரெண்டிற்கும் அவர் உடன்பட வேண்டும்;

அதிகார சபையினால் நிச்சயிக்கப்படும் இடத்திற்குரிய சேவைக் கட்டணம் அவரால் செலுத்தப்பட்டிருந்தால் மேலேயுள்ள சரத்தின் ஒழுங்கு விதிகள் ஏற்புடையதாகாது;

எனினும், அதிகார சபையினால் நிச்சயிக்கப்படும் இடத்திற்குரிய சேவைக் கட்டணத்தை செலுத்தியுள்ள ஒருவர் சம்பந்தமாக மேலேயுள்ள சரத்தின் ஒழுங்குவிதிகளோடு சம்பந்தப்பட மாட்டாது.

(2) அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரத்தில் அதிகார சபையின் கீழ் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையின் கீழ் பயணிகள் போக்குவரத்திலீடும் பஸ் வண்டியில்,

(i) அதிகார சபையினால் அல்லது வேறு நிறுவனமொன்றினால் விநியோகிக்கப்பட்டுள்ள ஏதாவது அனுமதிப் பத்திரம், பயண அனுமதிச்சீட்டு அல்லது அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு அதிகாரமின்றி பயணிக்கும்;

(ii) அந்தப் பயணத் தவணைக்காக தமக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிச் சீட்டினை பயண ஆரம்ப இடத்திலிருந்து பயணம் முடியும் வரை அவரிடம் வைத்துக்கொள்ளாத அல்லது;

(iii) அந்த பஸ் வண்டியின் நடத்துநரால் அல்லது சமகாலத்திற்காக அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஒருவரால் கேட்கப்படும் போது அந்த நுழைவுச் சீட்டை காட்டுவதை அல்லது ஒப்படைப்பதை மீறினால் அல்லது நிராகரிக்கும் ஒரு பயணி இந்தியதிச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக்கப்படுவதுடன் மஜிஸ்ரேட் ஒருவரால் குற்றவாளியாக்கப்படும் போது பத்தாயிரம் ரூபாவிற்கு தண்டணைக்குட்பட வேண்டும்.

எனினும், அந்தப்பயணத்திற்காக அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணத்தைப் போன்று இரண்டு மடங்குடன் அதிகார சபையினால் நிச்சயிக்கப்படும் இடத்திற்குரிய சேவை கட்டணமொன்றை அதிகார சபையினால் அனுமதியளிக்கப்பட்ட அதிகார சபையின் உத்தியோகத்தருக்கு அவரால் செலுத்தப்பட்டிருப்பின் அவ்வாறு பயணி ஒருவருக்கு எதிராக இந்த உபசரத்தின் கீழ் குற்றம் சம்பந்தமாக சிவில் அல்லது குற்றவியல் வழக்குத் தொடருவதோ நடத்துவதோ செய்யக்கூடாது. 40 (2) உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் முன் வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு பயணித்ததற்காக செல்லுபடியாகும் நுழைவுச் சீட்டோ வேறு அதிகாரம் தம்மிடம் இருக்கிறது என உறுதிப்படுத்தும் உரிமை அவருக்குண்டு.

(3) அதிகார சபையினால் அல்லது வேறு ஏதாவது ஒரு நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டிருக்கும் பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தில் அதிகார சபையின் கீழ் பயணிகள் போக்குவரத்திலீடுபடும் பஸ் வண்டியில் பயணிக்கும் பயணி ஒருவர்,

(i) அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணத்தை செலுத்தாதிருத்தல்;

(ii) தமது பயணமுடிவுக்கு வந்த போது பஸ் வண்டியிலிருந்து; வேண்டுமென்றே நிராகரிப்பது அல்லது தவிர்த்தல்;

(iii) யாராவது ஒருவருக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் அல்லது கேவலப்படுத்தும் விதத்தில் ஏதாவது தகாத, அல்லது ஆத்திரமடைந்த மொழியில் அல்லது வெருக்கத்தக்க அல்லது நடத்தையை பயன்படுத்தும் அல்லது ஏற்படுத்தும் பயணி ஒருவர் இந் நியதிச் சட்டத்தின் கீழ் குற்றம் புரிபவராவர்.

இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமொன்றிற்கு குற்றவாளியாக்கப்படுவதுடன் நீதிபதியினால் குற்றவாளியாக்கப்படும் போது அவர் மூன்று மாதத்திற்கு இரண்டு விதத்தில் ஒன்றிற்கு சிறைப்படுத்துவதற்கு அல்லது இருபதாயிரம் ரூபாவிற்கு குறையாத தண்டணைக்கு அல்லது சிறைப்படுத்தவும் தண்டப்பணம் என்ற இரண்டிற்கும் உடன்பட வேண்டும்.

எனினும் அதிகார சபையினால் நிச்சயிக்கப்படும் இடத்திற்குரிய சேவைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ள ஒருவர் சம்பந்தமாக மேலேயுள்ள விதிமுறைகள் சம்பந்தப்பட மாட்டாது.

(4) இந்தியதிச்சட்டத்தில் மேலே (1) (2) (3) எனும் உப சரத்துகளின்படி தண்டனை பெறக் கூடிய குற்றமொன்றை இழைத்த எவரொருவரும் பொலிஸ் உத்தியோகத்தராலும் சட்ட ரீதியாக கைது செய்ய முடியும் என்பதுடன் அவ்வாறு கைது செய்யப்படுபவர் உடனடியாக சட்டத்தின் படி நடவடிக்கை எடுப்பதற்காக மெஜிஸ்ரேட் ஒருவரின் முன்னால் வருவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். குற்றவாளிகளை கைது செய்தல்.

55. வேண்டுமென்றே அதிகார சபைக்கு பொய்யான அல்லது உண்மைக்குப் புறம்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட ஏதாவதொரு தவணை அறிக்கை எழுத்து மூல தகவல் அல்லது எழுத்து மூலம் விடயங்களை தெளிவு படுத்துதலை முன் வைக்கும் ஒருவர் இந்தியதிச் சட்டத்தின் கீழ் குற்றம்புரிந்தவராவதுடன் அதற்காக அதிகார சபையினால் நிச்சயிக்கப்படும் மேலதிக கட்டணத்திற்குட்பட வேண்டும். அது பற்றி மஜிஸ்ரேட் ஒருவருக்கு முன் நடத்தப்படும் வழக்கு விசாரணையில் குற்றவாளியாக்கப்பட்டால் பத்தாயிரம் ரூபாவிற்கு குறையாத தண்டத்திற்கோ 03 மாதத்திற் குறையாத காலத்திற்கான சிறைத்தண்டனைக்கு அல்லது அந்த அபராதம் சிறைத்தண்டனை எனும் இரண்டிற்கும் உட்பட வேண்டும். உண்மைக்குப் புறம்பான விபரங்கள்.

56. (1) அனுமதியின்றி பஸ் நிறுத்துமிடங்களிலிருந்து பயணிகளை எடுத்தல் அல்லது ஏற்றுதல், அதற்கு உதவுவதற்கு பயணிகளை ஒன்று சேர்க்கும் நோக்கத்தில் சத்தமிட்டு கத்துதல் அதிகார சபை உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு தடையாக அல்லது இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயல்படுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கும் அவ்வாறானவர்களுக் கெதிராக சம்பந்தப்பட்ட மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியுமென்பதுடன், வழக்கு விசாரணையில் குற்றவாளியாக்கப்பட்டால் பத்தாயிரத்திற்கு குறையாத தண்டத்திற்கோ 3 மாதத்திற்கு குறையாத காலத்திற்கு சிறைப்படுத்தலுக்கோ அல்லது இரண்டிற்கும் உட்பட வேண்டும். பஸ் வண்டி நிறுத்துமிடல்.

(2) அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை போக்குவரத்திலீடுபடுத்தக் கூடாது என்பதுடன் அவ்வாறு செய்வது இந்நியதிச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கும் அவ்வாறானவர்களுக்கெதிராக சம்பந்தப்பட்ட மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியுமென்பதுடன், வழக்கு விசாரணையில் குற்றவாளியாக்கப்பட்டால் இருபதாயிரம் ரூபாவிற்கு குறையாத தண்டத்திற்கோ அல்லது 3 மாதத்திற்கு குறையாத சிறைப்படுத்துலுக்கோ அல்லது இரண்டிற்கும் உட்பட வேண்டும். அனுமதிப் பத்திரமின்றி போக்குவரத்து செய்தல்.

(3) (i) அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி பாடசாலை சேவை, தொழிற்சாலை அல்லது சேவை நிலையங்களுக்கான ஊழியர்களை போக்குவரத் திலீடுபடுத்தக் கூடாது என்பதுடன் அவ்வாறு செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கும் அவ்வாறானவர்களுக்கெதிராக சம்பந்தப்பட்ட மஜிஸ்ரெட் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியுமென்பதுடன், வழக்கு விசாரணையில் வேறு பொது பயணிகள் போக்குவரத்து சேவை.

குற்றவாளியாக்கப்பட்டால் பத்தாயிரம் ரூபாவிற்கு குறையாத தண்டனைக்கோ மூன்று மாதத்திற்குக் குறையாத சிறைத்தண்டனைக்கோ உட்பட வேண்டும்.

(ii) அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரமின்றி, முச்சக்கர வண்டிகளில் பயணிகளை போக்குவரத்து செய்தல் இந்நியதிச்சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றமாகும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கும் அவ்வாறானவர்களுக்கெதிராக சம்பந்தப்பட்ட மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியுமென்பதுடன், வழக்கு விசாரணையில் குற்றவாளியாக்கப்பட்டால் அந்நபர் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாத தண்டப் பணத்துக்கு அல்லது மூன்றுமாதத்திற்கு இரண்டு விதத்தில் ஒரு வகையில் சிறைப்படுத்துதலுக்கோ அல்லது தண்டனை ஆகிய இரண்டிற்கும் உட்பட வேண்டும்.

*பொருட்களைக் கொண்டு செல்லல்.*

(4) அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட ஏதாவதொரு அனுமதிப்பத்திரமின்றி பொருட்களைப் போக்குவரத்து செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கும் அவ்வாறானவர்களுக் கெதிராக சம்பந்தப்பட்ட மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியுமென்பதுடன், வழக்கு விசாரணையில் குற்றவாளியாக்கப்பட்டால் பத்தாயிரம் ரூபாவிற்கு குறையாத தண்டனைக்கு அல்லது ஆறு மாதத்திற்குக் குறையாத காலத்திற்கு சிறைப்படுத்தலுக்கு அல்லது இரண்டிற்கும் உட்பட வேண்டும்.

*அதிகார சபையை தடை செய்தல், வற்புறுத்துதல்.*

57. அதிகார சபையினால் இந்நியதிச்சட்டத்தின் கீழ் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், பொறுப்புகள், கடமைகளை நிறைவேற்றும் போது அல்லது அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தர் அவரால் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை அல்லது கடமைகளை நிறைவேற்றும் போது அதற்கு சட்டவிரோதமாகத் தடை ஏற்படுத்துதல் தலையிடுதல் எதிராக செயல்படும் அல்லது வற்புறுத்தும் கடுமையாக எதிர்ப்புக் காட்டும் அல்லது அவ்வாறு செய்ய முயற்சிக்கும் எவரொருவரும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாவதுடன் மஜிஸ்ரேட் முன்னிலையில் நடத்தப்படும் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கும் அவ்வாறானவர்களுக் கெதிராக சம்பந்தப்பட்ட மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியுமென்பதுடன், வழக்கு விசாரணையில் குற்றவாளியாக்கப்பட்டால் ஐம்பதினாயிரம் ரூபாவிற்குக் குறையாத தண்டனைக்கு அல்லது ஒரு வருடத்திற்குக் குறையாத காலத்திற்கு சிறைப்படுத்தலுக்கு உட்பட வேண்டும்.

*பொதுவான தண்டனை.*

58. இந்நியதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் அல்லது அதன் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ள அல்லது வழங் கப்பட்டுள்ள கட்டளை தீர்மானம், பணிப்புரைகளை மீறி செயல்படும் ஒருவர் இந்நியதிச்சட்டத்தின் கீழ் குற்றமிழைப்பதுடன் அக்குற்றம் இந்நியதிச் சட்டத்தின் மூலம் விசேட தண்டனையாக கருதப்படாதிருக்கும் குற்றமாகும் சந்தர்ப்பத்தில் நீதிவான் நீதிமன்றில் தொடுக்கப்படும் வழக்கு விசாரணையின் பின் நீதிவானால் குற்றவாளியாக்கப்படும் போது அவர் பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாத தண்டப்பணத்திற்கோ மூன்று மாதத்துக்கு குறையாத சிரைப்படுத்தலுக்கோ அல்லது ஒரு விதத்தில் சிறையிலிடப்படவோ அல்லது குறிப்பிட்ட சிறையிலிடப்படுவதற்கோ தண்டத்திற்கோ எனும் இரண்டிற்கும் உட்பட வேண்டும்.

*வழக்குத் தொடர வதற்காக அதிகாரம் வழங்குதல்.*

59. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றம் சம்பந்தமாக வழக்குத் தொடரும் செயல்களுக்காக அதிகார சபையினால் எழுத்து மூல ஆவணமொன்றின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் அல்லது ஊழியர் ஒருவர் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்கு ஒழுங்கு விதிகள் சட்டத்தின் 136 ஆவது சரத்தின் பொருள்களுக்கேற்ப அரச உத்தியோகத்தராகக் கருதப்பட வேண்டும்.

## VIII ஆவது பகுதி

### நீக்குவதற்கும் உள்ளடக்குவதற்குமான விதிமுறைகள்

*நீக்கப்பட்ட நியதிச்சட்டத்தின் கீழ் நிபந்தனைகள் (கட்டளை).*

60. அமைச்சர் அவர்களினால் வேறு வகையில் தீர்மானிக்கப்படும் வரை 1992 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கப் பாதைகளில் பயணிகளை போக்குவரத்துச் சேவை நியதிச்சட்டத்தின் கீழும் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபை நியதிச்சட்டத்தின் கீழும் தயாரிக்கப்பட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளும் நிபந்தனைகளும் இந்நியதிச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு முரணாக இல்லாவிட்டால் இந்நியதிச்சட்டத்தின் கீழ் நிபந்தனைகள் விதிக்கப்படும் வரை செல்லுபடியாகும் கட்டளைகளும் நிபந்தனைகளும் மேலும் வலுவிலுள்ளதாக இருக்க வேண்டும்.

*61.* எனினும், அமைச்சர் அவர்களால் இந்நியதிச் சட்டத்தின் 04 ஆவது சரத்தின் கீழ் அதிகார சபையின் அங்கத்தவர்களை நியமிக்கும் வரை மத்திய மாகாணத்தின் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபை நியதிச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட இந்நியதிச்சட்டம் நடைமுறைப்படுத்தும் தினத்திற்கு முன் கிட்டிய தினம் வரை 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் அங்கத்துவ பதவி வகிக்கும் சகல அங்கத்தவர்களும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகார சபையின் அங்கத்தவர்களாக கருதப்பட வேண்டும்.

*அதிகார சபையின் சேவையிலீடு பட்டுள்ளவர்கள் சேவை வழங்குனர்கள்.*

*62.* (1) குறிப்பிட்ட தினத்திற்கு முன்னுள்ள திகதியில் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவை நியதிச்சட்டத்தின் கீழ் சேவையிலீடுபட்டுள்ள சகல உத்தியோகத்தர்களும் வேறு சேவையிலீடுபட்டுள்ள அவர்கள் குறிப்பிட்ட பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபை சேவையில் ஈடுபட்டமை சம்பந்தமான தீர்மானங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் மேலதிகமாக இலாபகரமான தன்மையில் குறையாதவர்கள் தீர்மானங்களுக்கும் நிபந்தனைக்கு கீழ் அதிகார சபையின் சேவையிலீடுபட்டவர்களாக கருதப்பட வேண்டும். இந்த சேவையிலீடுபட்டவர்களின் சேவையை அவர்களது சேவையிலீடுபட்டுள்ளமை பற்றி சட்ட ரீதியிலான காரணங்களின் பேரில் அன்றி வேறு விதத்தில் முடிக்க முடியாது.

*ஒப்பந்தங்கள் உரிமைகள் கட்டுப்படல் பொறுப்பு கூறல் மற்றும் தொடரப்பட்டுள்ளதும் தற்போதுள்ள வழக்குகளுக்கான நிதி ஒதுக்கீடு.*

(2) குறிப்பிட்ட தினத்திற்கு முந்திய திகதியில் 2000 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கம் மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையின் நியதிச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள அக்குறிப்பிட்ட அதிகார சபைக்கு சொந்தமான சகல நிதியும் உட்பட குறிப்பிட்ட அதிகார சபையின் சகல அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் அதிகார சபைக்கு சொந்தமாக்கப்பட வேண்டுமென்பதுடன் குறிப்பிட்ட சகல சொத்துக்களும் அதிகார சபையின் சொத்துக்களாக வேண்டும்.

(3) குறிப்பிட்ட தினத்திற்கு முந்திய திகதியில் 2000 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் நியதிச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மத்திய மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடைகள் சம்பந்தமான சகல உடன்பாடுகள் பொறுப்புகள் உட்பட கொந்தராத்து, ஒப்பந்தங்கள் அதிகார சபையின் சொந்தராத்து ஒப்பந்தங்கள் என கருதப்பட வேண்டும்.

(4) குறிப்பிட்ட தினத்திற்கு முந்திய திகதியில் ஏதாவது நீதிமன்றில் அல்லது தீர்ப்புச் சபையில் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மத்திய மாகாண சபையின் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் அந்த அதிகார சபைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள அல்லது முன் வைக்கப்பட்டுள்ள வழக்கொன்று, விண்ணப்பமொன்று, மேன் முறையீடொன்று என கருதப்படுவதுடன் அவற்றை தொடர்ந்து நடத்துவது அல்லது முடிக்கப்பட வேண்டும்.

(5) குறிப்பிட்ட திகதிக்கு முந்திய திகதியில் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவை நியதிச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையினால் அல்லது அதற்கு எதிராக தொடரப்பட்டுள்ள முன்வைக்கப்பட்டுள்ள ஒரு வழக்கின் போது வேண்டுகோளின் போது மேன் முறையீட்டின் போது நீதிமன்றத்திலோ அல்லது தீர்ப்புச் சபையினால் குறித்து வைக்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள தினத்திற்கு முந்திய தினத்திலேயே அது முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதி நிறைவேற்றப்படாது எஞ்சியிருக்கும் ஏதாவது அறிவித்தல் அல்லது கட்டளை சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் அதிகார சபைக்குச் சார்பாக அல்லது எதிராக குறித்து வைக்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள அறிவித்தல் அல்லது கட்டளையாகக் கருதப்பட வேண்டுமென்பதுடன் சிவில் வழக்கு நியதிக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப அறிவித்தல் அல்லது கட்டளைகளை செயல்படுத்துவதற்குரிய வேறு ஏதாவது நியதிச்சட்டத்தின் கீழ் அதிகார சபையினால் அதற்கு எதிராக செயல்பட முடியும்.

(6) 1992 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்துச் சேவை நியதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின்படி அல்லது 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மத்திய மாகாணத்தின் பயணிகள் சேவை அதிகார சபை நியதிச்சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட இல்லையேல் அக்குறிப்பிட்ட

நியதிச் சட்டத்தின் கீழ் பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரம் என்று கருதப்பட்டதுமான இந்த நியதிச்சட்டம் அங்கீகரிக்கப்பட்ட திகதிக்கு முழுமையாக செல்லுபடியானதுமான பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் அல்லது வேறு எழுத்தாவணம் இந்நியதிச்சட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்டு இரத்துச் செய்யப்படாதிருப்பின் அதில் குறிப்பிட்ட செல்லுபடியாகும் காலத்திற்குள் இந்நியதிச்சட்டத்தின் கீழ் விநியோகிகப்பட்ட பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரமாகக் கருதப்பட வேண்டும்.

63. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதங்களுக்கிடையில் ஏதாவதொரு முரண்பாடு ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழிப்பதமே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

பொருள் விளக்கம்.

64. இந்நியதிச்சட்டத்தில் பொருள் சம்பந்தமாக வேறு விளக்கம் தேவைபட்டால் ஒழிய,

- "அமைச்ச" எனப்படுவது மத்திய மாகாண அமைச்சுக்குழுவின் போக்குவரத்துச் சேவை விடயப் பொறுப்பு அமைச்சர் எனப்படும்.
- "அமைச்சுக் குழு" என்பது மத்திய மாகாண சபையின் அமைச்சுக் குழுவாகும்,
- "மாகாணம் என்பது" என்பது மத்திய மாகாணம் எனப்படும்,
- "மாகாண சபை" என்பது மத்திய மாகாண சபை எனப்படும்,
- "உத்தியோகத்தர்" என்பது மத்திய மாகாண போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுட்பட அதிகார சபையில் சேவை புரியும் சகல ஊழியர்களும் எனப்படும்.
- "சிரேஸ்ட உத்தியோகத்தர்" என்பது அரச நிர்வாக சேவையில் உதவிச் செயலாளர் பதவிக்குக் குறையாத பதவி உத்தியோகத்தர் அல்லது அதனோடு சமாந்தர சேவையில் அதனோடு சமமான பதவியைக் கொண்ட ஒருவர் எனப்படும்.
- "அனுமதிப் பத்திரம்" என்பது "பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம்" "பொருட்கள் சேவை அனுமதிப்பத்திரம் " விசேட சேவை அனுமதிப் பத்திரம், பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் "பாதைகள் அனுமதிப்பத்திரம்" நிரந்தர போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம்" "பாடசாலை சேவை அனுமதிப்பத்திரம்" தொழிற்சாலை போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம்" எனும் பெயர்களில் ஏதோ அல்லது ஏதாவதொன்றில் இந்த நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு எழுத்து மூல சட்டத்தின் கீழ் கட்டணங்களின் பேரில் மோட்டார் வண்டிகளின் மூலம் பயணிகள் போக்குவரத்திலோ பொருள் போக்குவரத்திலோ பயன்படுத்துவதற்காக அதிகாரமளித்து விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரம் எனப்படும்.
- "போக்குவரத்துச் சேவை" என்பது பயணிகளை அல்லது பொருட்களை போக்குவரத்து செய்யும் ஏதோ ஒரு வாகனம் எனப்படும்.
- "பஸ் நிறுத்துமிடம்" என்பது மத்திய மாகாணத்திற்குள் அமைந்துள்ள பஸ் பயணிகள் பரியந்தம் என கருதப்பட வேண்டுமென்பதுடன் உப பட்டியல் 01 இல் குறிப்பிடப்பட்ட மத்திய மாகாணத்திற்குள் அமைந்துள்ள பஸ் வண்டி நிறுத்துமிடம் அதிகார சபைக்குரிய மத்திய மாகாணத்திற்குள் அமைந்துள்ள பஸ் நிறுத்துமிடங்களும் பாதைகளின் இரண்டு பக்கங்களில் பஸ் நிறுத்தும் இடங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.
- "வர்த்தமானி" என்பது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி எனப்படும்.
- "உள்ளூராட்சி நிறுவனம்" என்பது மாநகர சபை, நகர சபை, சிறு நகர சபை, பிரதே சபை எனப்படும்.

- "பஸ் வண்டியும் ஓம்னி பஸ் வண்டி" என்பது மோட்டார் வண்டி சட்டத்தின் கீழ் ஓம்னி பஸ் வண்டியாக பதிவு செய்யப்பட்ட மோட்டார் கோச் வண்டி எனப்படுவதுமான அதற்கு இடைநிலை விடய வாகனம் உள்ளடக்கப்படுமாறு கருதப்பட வேண்டும்.

- "பயணி" எனப்படுவது வாடகை வண்டியில் அல்லது பஸ் வண்டியில், பாடசாலை சேவை பஸ் வண்டியில் அல்லது வேனில் தொழிற்சாலை சேவை பஸ் வண்டியில் அல்லது வேனில் பயணிக்கும் எனினும் சாரதி பஸ் வண்டியாயின் நடத்துனர்/வண்டி உதவியாளர் உள்ளடக்கப்படாதவர்களாவர்.

- "வெவ்வேறு கட்டணம்" என்பது பஸ் வண்டியொன்றில் பயணியாக கொண்டு செல்லப்படுவதற்கு யாராவது ஒருவருக்கு உரிமையளிக்கப்படும் அவரால் செலுத்தப்படும் கட்டணம் எனப்படும்.

- "மோட்டார் வண்டி" என்பது மோட்டார் வண்டி போக்குவரத்து சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வண்டி எனப்படும்.

- "மோட்டார் வாகனம்" என்பது மோட்டார் வாகன சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி மோட்டார் வாகனம் எனப்படும்.

- "லொறி" எனப்படுவது மோட்டார் வண்டி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வாகனம் எனப்படும்.

- "ட்ரேலர்" எனப்படுவது மோட்டார் வண்டி போக்குவரத்து சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ட்ரேலர் எனப்படும்.

- "வாடகை வாகனம்" எனப்படுவது பெருந்தெருக்கள் அல்லது வேறொரு இடத்தல் பயணிகளுக்கு வாடகைக்கு கொடுப்பதற்காக நிறுத்தி வைத்தல் அல்லது தரித்து வைத்தல் அல்லது பயணித்தல் எனப்படும்.

- "பயணிகள் போக்குவரத்து சேவை" எனப்படுவது பெருந்தெருக்களில் கட்டணம் அறவிடப்பட்டு பாடசாலை மாணவர்கள் காரியாலய ஊழியர்கள் உட்பட ஏனைய பயணிகளை போக்குவரத்திலீடுபடுத்தும் சகல வாகனங்கள் எனப்படும்.

- "முறையாக நியமித்துக்கொள்ளும் விதிமுறைகளின்படி" என்பது அரச முகாமைத்துவ சேவை திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்ட நியமிக்கும் ஒழுங்கு விதிகள்.

- 226 ஆவது சரத்தில் "மோட்டார் வாகனமொன்று" எனப்படுவது பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் மோட்டார் வண்டிகள் எனப்படும்.

- 27 ஆவது சரத்தில் "மோட்டார் வாகனமொன்று" என்பது பொருள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் லொறி ட்ரேலர் போன்ற வண்டிகள் எனப்படும்.

**கண்டி மாவட்டம்**

| தொடர் இல. | பஸ் நிறுத்துமிடம் | இடத்தின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏக். | றூட் | பேர்ச். |
| 1. | போகம்பர பஸ் நிறுத்துமிடம் | 1 | 1 | 23.8 |
| 2. | தெல்தொட்ட பஸ் நிறுத்துமிடம் | 0 | 2 | 17.06 |
| 3. | அம்பிட்டிய பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 24.27 |
| 4. | நாவலப்பிட்டி பஸ் நிறுத்துமிடம் | 0 | 2 | 27.81 |
| 5. | தலாத்துஓய பஸ் நிறுத்துமிடம் | 0 | 1 | 17.34 |
| 6. | அங்கும்புர பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 17.68 |
| 7. | பன்வில பஸ் நிறுத்துமிடம் | 0 | 1 | 6.93 |

| தொடர் இல. | பஸ் நிறுத்துமிடம் | இடத்தின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏக். | றூட் | பேர்ச். |
| 8. | கெலிஓய பஸ் நிறுத்துமிடம் | 0 | 3 | 12.76 |
| 9. | வெலிகல்ல பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 21.51 |
| 10. | கம்பளை பஸ் நிறுத்துமிடம் | 0 | 2 | 27.77 |
| 11. | குட்செட் பிரதான பஸ் நிறுத்துமிடம் | 2 | 0 | 31.45 |
| 12. | பொத்தபிட்டிய பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 36.13 |
| 13. | குட்செட் தனி பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 29.22 |
| 14. | வத்தேகம பஸ் நிறுத்துமிடம் | 0 | 2 | 24.02 |
| 15. | பெனிதெனிய பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 4.03 |
| 16. | கடுகன்னாவ பஸ் நிறுத்துமிடம் | 0 | 1 | 26.5 |
| 17. | ஹாரகம பஸ் நிறுத்துமிடம் | 0 | 1 | 22.59 |
| 18. | கரல்லியத்த பஸ் நிறுத்துமிடம் | 0 | 2 | 4.45 |
| 19. | திகன பஸ் நிறுத்துமிடம் | 2 | 2 | 25.13 |
| 20. | மணிக்கூட்டு கோபுர பஸ் நிறுத்துமிடம் | 0 | 2 | 36.95 |
| 21. | டொரின்டன் பஸ் நிறுத்துமிடம் | | | 14.10 |
| 22. | பேராதனை பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 29.24 |
| 23. | மஹகந்த பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 4.78 |
| 24. | கட்டுகஸ்தொட்ட பஸ் நிறுத்துமிடம் | | | |
| 25. | பொக்காவல பஸ் நிறுத்துமிடம் | 0 | 1 | 5.70 |
| 26. | மெனிக்ஹின்ன பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 28.07 |
| 27. | அலவத்துகொட பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 7.98 |
| 28. | பொல்கொல்ல பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 10.60 |
| 29. | ஹசலக்க பஸ் நிறுத்துமிடம் | 0 | 2 | 21.05 |
| 30. | கங்ஹத்த பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 17.16 |
| 31. | புஸ்ஸெல்லாவ பஸ் நிறுத்துமிடம் | 0 | | 18.78 |
| 32. | கலகெதர பஸ் நிறுத்துமிடம் | 0 | 1 | 7.57 |
| 33. | மெதவல பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 26.73 |
| 34. | அமுனுகம பஸ் நிறுத்துமிடம் | - | - | - |
| 35. | பெணிதெனிய பஸ் நிறுத்துமிடம் | | | |
| 36. | கடுகஸ்தொட்ட பஸ் நிறுத்துமிடம் | | | |
| 37. | பிரதான காரியாலயம் | | | |

**நுவரெலியா மாவட்டம்**

| தொடர் இல. | பஸ் நிறுத்துமிடம் | இடத்தின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏக். | றூட் | பேர்ச். |
| 1. | மஸ்கெலியா பஸ் நிறுத்துமிடம் | 0 | 1 | 19.82 |
| 2. | சாமிமலை பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 29.89 |
| 3. | தலவாக்கலை பஸ் நிறுத்துமிடம் | 0 | 1 | 34.60 |
| 4. | டயகம பஸ் நிறுத்துமிடம் | 0 | 1 | 1.07 |
| 5. | ஹட்டன் பஸ் நிறுத்துமிடம் | 1 | 1 | 1.24 |
| 6. | நில்தனடாஹின்ன பஸ் நிறுத்துமிடம் | 0 | 2 | 18.96 |
| 7. | நுவரெலியா பஸ் நிறுத்துமிடம் | 1 | 2 | 7.33 |
| 8. | ஹங்குராங்கெத்த பஸ் நிறுத்துமிடம் | 0 | 2 | 13.55 |
| 9. | வலப்பனை பஸ் நிறுத்துமிடம் | 0 | 3 | 20.03 |
| 10. | ராகலை பஸ் நிறுத்துமிடம் | 1 | 2 | 33.0 |
| 11. | நல்லத்தண்ணி பஸ் நிறுத்துமிடம் | | | |
| 12. | பூண்டுலோயா பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 13.48 |
| 13. | கினிகத்ஹேன பஸ் நிறுத்துமிடம் | 0 | 0 | 31.94 |

| தொடர் இல. | பஸ் நிறுத்துமிடம் | இடத்தின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏக். | றூட் | பேர்ச். |
| 14. | கொத்மலை பஸ் நிறுத்துமிடம் | 0 | 2 | 15.36 |
| 15. | நுவரெலியா தனியார் பஸ் நிறுத்துமிடம் | 0 | 1 | - |
| 16. | ரிக்கில்லகஸ்கடை பஸ் நிறுத்துமிடம் | 0 | 1 | 21.0 |
| 17. | பகவன்தலாவ பஸ் நிறுத்துமிடம் | | | |
| 18. | பகவன்தலாவ பஸ் நிறுத்துமிடம் | - | - | - |
| 19. | பதியபெலெல்ல பஸ் நிறுத்துமிடம் | | | |
| 20. | நுவரெலியா மாவட்ட காரியாலயம் (காணி) | - | - | 0.052 |

**மாத்தளை மாவட்டம்**

| தொடர் இல. | பஸ் நிறுத்துமிடம் | இடத்தின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏக். | றூட் | பேர்ச். |
| 1. | நாவுல பஸ் நிறுத்துமிடம் | 0 | 3 | 6.40 |
| 2. | ரஜவீதிய பஸ் நிறுத்துமிடம் (அம்பகஹமுல) | 0 | 1 | 2.86 |
| 3. | ஹெட்டிபொல பஸ் நிறுத்துமிடம் | 1 | 0 | 23.69 |
| 4. | ரத்தொட்ட பஸ் நிறுத்துமிடம் | 0 | 3 | 0 |
| 5. | கொன்கஹவெல பஸ் நிறுத்துமிடம் | 0 | 3 | 4.62 |
| 6. | நுகசெவன பஸ் நிறுத்துமிடம் | 0 | 1 | 13.80 |
| 7. | தம்புல்ல பஸ் நிறுத்துமிடம் | 2 | 2 | 33.68 |
| 8. | கலேவெல பஸ் நிறுத்துமிடம் | | | ஹெக்டயர் 0.2302 |
| 9. | லக்கல பஸ் நிறுத்துமிடம் | - | - | - |
| 10. | ஹெட்டிப்பொல பஸ் நிறுத்துமிடம் | 1 | 0 | 23.69 |
| 11. | மாத்தளை பஸ் நிறுத்துமிடம் | - | - | 0.1292 |

9-639

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.